விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 353 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 21 புதன்கிழமை (07.12.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




அபிவிருத்தி ஒத்துழைப்பு தொடர்பில்

## 5 முக்கிய இராஜதந்திரிகளுடன் ஜனாதிபதி ரணில் கலந்துரையாடல்



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை இலங்கையிலுள்ள மிக முக்கிய நாடுகளின் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களை சந்தித்துள்ளார்.

பிரித்தானிய உயர்ஸ்தானிகர், ஜப்பானிய தூதுவர், அமெரிக்கத் தூதுவர், இந்திய 15

மக்களை மீட்க

## அரசுக்கு ஆதரவு வழங்குவேன்

ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

பட்டினியில் இருந்து மக்களை மீட்பதற்கான அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்க தயாராக இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். 02

புதிய பொருளாதார முறைமையை

# அறிமுகம் செய்ய நடவடிக்கை



## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

*(கொழும்பு)* 2050ஆம் ஆண்டை எதிர்கொள்ளும்வகையில் வலுவான புதிய பொருளாதார முறைமையை அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இது நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் பொருளாதார மறுசீரமைப்புக்கு மேலதிகமான பணி என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். *(15ஆம் பக்கம் பார்க்க)*

யாழிலிருந்து சென்னைக்கு

## வாரத்துக்கு நான்கு விமான சேவைகள்

12ஆம் திகதி முதல் ஆரம்பம்

(கொழும்பு)

யாழ்ப்பாணம் - பலாலி விமான நிலையத்திலிருந்து இந்தியாவின் சென்னைக்கு வாரத்திற்கு நான்கு விமான சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக குடிசார் விமான சேவைகள் அதிகார சபையின் தலைவர் உபுல் தர்மதாச தெரிவித்துள்ளார். 15

## பால் புரைக்கேறியதில் 3 மாத குழந்தை மரணம்

மருதனார்மடத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

தாய்ப்பால்புரைக்கேறியதில் 3 மாத குழந்தை ஒன்று மரணமடைந்துள்ளது.

மருதனார்மடத்தில் நேற்றுக்காலை 5 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் கோகிலன் சாரோன் என்ற குழந்தையே 15

விவசாயத்துறைக்கு தீர்வு காணாவிட்டால்

## நாடு மிக மோசமான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் - மைத்திரி



(கொழும்பு)

விவசாயத்துறையில் எடுத்த தீர்மானங்களின் விளைவை முழுநாட்டு மக்களும் தற்போது நன்கு எதிர்கொண்டுள்ளார்கள்.

விவசாயத்துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கு விரைவான தீர்வை காணாவிட்டால் நாடு மிக மோசமான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என முன்னாள் 02

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில்

## குமாராலய தீபம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்த 15

குடும்ப ஆட்சி காரணமாகவே

## ராஜபக்ஷக்கள் கூண்டோடு விரட்டியடிக்கப்பட்டார்கள்

விமல் வீரவன்ஸ



(கொழும்பு)

"ராஜபக்ஷக்கள் மீண்டும் 2019 இல் ஆட்சிக்கு வந்தபோது அவர்கள் திருந்துவார்கள் என்று நாங்கள் மட்டுமல்ல மக்களும் எதிர்பார்த்தார்கள். 15

## ரணிலிடமிருந்து அழைப்பு வரவில்லை

தமிழ்க் கட்சிகள்

(கொழும்பு)

தமிழ்க் கட்சிகளுடனான பேச்சுவார்த்தைக்கு தாம் தயார் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் அறிவித்த போதிலும் இது 15

## வாளிக்குள் தவறிவிழுந்த ஒன்றரை வயது குழந்தை பலி

ஊர்காவற்றுறையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

குளியலறை வாளிக்குள் தவறி விழுந்த ஒன்றரை வயது ஆண் குழந்தை ஒன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறையைச் சேர்ந்த சசீபன் கெற்றியான் என்ற குழந்தையே மரணமடைந்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை அவரின் பெற்றோர் கிறிஸ் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்துமீறும் இந்திய மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்படும்

## ஜனாதிபதி ரணில் முழு அதிகாரத்தை வழங்கியுள்ளார் - அமைச்சர் டக்ளஸ்

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்படும் எனக் கூறப்பட்ட நிலையில், அது குறித்து உங்களுக்கு தீர்மானம் எடுக்க முடியுமா என பாராளுமன்றில் எழுப்பப்பட்ட கேள்விக்கு, பதிலளித்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதி தமக்கு முழு அதிகாரத்தையும் வழங்கியுள்ளதாக குறிப்பிட்டார்.

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் நேற்று பாராளுமன்றில் எழுப்பிய கேள்விக்கே, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு பதிலளித்தார்.

குறித்த விடயம் தொடர்பில், பாராளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் சபையில் கேள்வி எழுப்பினார்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமராக பதவிவகித்த காலத்தில், மன்னாருக்கு விஜயம் மேற்கொண்டிருந்தபோது, இந்தியப் படகுகள் வந்தால், துப்பாக்கிச்சூடு நடத்தப்படும் எனக் கூறியிருந்தார்.

தற்போது அவர் ஜனாதிபதி தனக்கு முழு அதிகாரத்தை வழங்கியுள்ளதாகவும், தாம் செயற்படுவதாகவும் மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். (ம-7)

# 300 இற்கும் மேற்பட்ட பட்டதாரிகள் சிறையில்

(கொழும்பு)

கடந்த 2021ஆம் ஆண்டில் மாத்திரம் பல்வேறு குற்றச்சாட்டுகளுக்காக 14,547 குற்றவாளிகளும், 62,426 சந்தேகநபர்களும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களில் 300இற்கும் மேற்பட்டோர் பட்டதாரிகள் என்றும் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில், பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நீதிமன்றங்களால் தண்டனை விதிக்கப்பட்ட அல்லது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்துள்ளதாக சிறைச்சாலைகளின் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

மொத்தமாக 349 பட்டதாரிகளும் (0.5%), உயர்தரம் சித்திபெற்ற 5,395 பேரும் (7%), சாதாரண தரத்தில் சித்திபெற்ற 17,616 பேரும் (22.9%) சிறையிலடைக்கப்பட்டிருப்பதாக சிறைச்சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறையில் அடைக்கப்பட்டவர்களில் 2.2% பேர் பாடசாலைக்கு செல்லாதவர்கள் என்று புள்ளிவிவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இதனிடையே, சிறைச்சாலை தகவல்களின்படி அவர்களை வயது அடிப்படையில் வகைப்படுத்தும் பட்சத்தில், கடந்த ஆண்டு 16 வயதுக்குட்பட்ட 87 பேரும், 16 முதல் 22 வயதுக்குட்பட்ட 5,983 பேரும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், 22-30 வயதுக்குட்பட்ட 18,377 பேரும், 30-40 வயதுக்குட்பட்ட 26,134 பேரும் பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அவ்வாறே சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்களின் பெரும்பாலனோர் 30-40 வயதுக்குட்பட்டவர்களாவர். குறித்த வயது பிரிவுக்குட்பட்ட 26,134 பேர் (34.0%) சிறையில் உள்ளனர்.

அதேவேளை, 70 வயதுக்கு மேற்பட்ட 436 கைதிகளும் சிறையில் உள்ளதாக சிறைச்சாலை ஊடகப்பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

# 31 அரசியல் கைதிகள் மாத்திரமே சிறையில் உள்ளனர்

## அமைச்சர் விஜயதாச ராஜபக்ச

(கொழும்பு)

நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் 31 அரசியல் கைதிகள் மாத்திரமே உள்ளனர் என்று நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

பாராளுமன்றில் நடைபெற்ற நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுகளுக்கான பாதீட்டு ஒதுக்கம் குறித்த குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

2015ஆம் ஆண்டு காலப்பகுதியில் சுமார் 400 அரசியல் கைதிகள் இருந்தனர். பின்னர் அந்த எண்ணிக்கை 110 ஆகக் குறைக்கப்பட்டது.

அவர்கள் தொடர்பான வழக்குகளை விரைவில் நிறைவு செய்வதற்காக கொழும்பு மற்றும் அநுராதபுரம் ஆகிய பகுதிகளில் இரண்டு விசேட மேல் நீதிமன்றங்கள் ஸ்தாபிக்கப்பட்டன.

இதையடுத்து குறித்த எண்ணிக்கை 60ஆகக் குறைந்தது. இந்நிலையில், தற்போது 16 குற்றவாளிகளும் 15 சந்தேகநபர்களும் உள்ளனர். குறித்த வழக்குகளை விரைவில் நிறைவு செய்யுமாறு பிரதம நீதியரசரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றார். (ம-7)


# 4ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
கோணேஸ்வரன்
சுநீதி

தோற்றம் 1968.10.07
மறைவு - 2018.11.22

குடும்பத்தின் குலவிளக்காய்
பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
வாழ்வின் வழிகாட்டியாய்
வாழ்ந்த எம் குலவிளக்கே
எட்ட முடியாத தொலைவு சென்று
ஆண்டு நான்கல்ல நாலாயிரம் ஆகலாம்
காலங்கள் விடைபெறலாம்
நெஞ்சில் பதிந்த நினைவலைகள்
என்றென்றும் நம்மை விட்டு நீங்காது

மண்டைதீவு,
2ம் வட்டாரம்.

(13698)

கணவர்,
பிள்ளைகள், தாய்.


## அரசுக்கு ஆதரவு...

தான் தனியாக அவ்வாறான ஒத்துழைப்பை வழங்க போவதில்லை எனவும் ஒரு அணியுடன் அரசாங்கத்திற்கான அந்த ஆதரவை வழங்க போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

மக்கள் உணவை தேடிக்கொள்ள முடியாமல் மிகவும் கஷ்டத்தில் இருக்கும் காலத்தில் அரசியல் பேசக்கூடாது.

போர் நடைபெற்ற காலத்தில் நாடு பாரதூரமான நெருக்கடிக்குள் விழுந்த நேரத்தில் நான் அரசாங்கத்தில் இணைந்து, அந்த நடவடிக்கைக்கு உதவினேன். தற்போதும் அந்த போருக்கு நிகரான பொருளாதார நெருக்கடியே நாட்டில் ஏற்பட்டுள்ளது எனவும் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். (ம-7)

## நாடு மிக ...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

விவசாய நடவடிக்கைகளுக்கான பயிர் விதை விநியோகத்தில் பாரிய தட்டுப்பாடு காணப்படுகிறது. காலநிலை மற்றும் மண்வளத்திற்கு உகந்த வகையில் பயிர் விதைகள் சந்தையில் விநியோகிக்கப்படுவதில்லை.

தேசிய மட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட உணவு பொருட்கள் தற்போது முழுமையாக இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நாட்டின் உணவு பாதுகாப்பு எந்நிலையில் காணப்படுகிறது என்பதை பற்றி புதிதாக குறிப்பிட வேண்டிய தேவை கிடையாது.

உணவு பாதுகாப்பிற்கு உரிய சட்டம் இதுவரை இயற்றப்படவில்லை. உணவு பாதுகாப்புக்கு விரைவான தீர்வு எடுக்காவிட்டால் அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றார். (ம-7)


# கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலக தாபனக்கிளையில்
அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும்
கி.செந்தூரன் அவர்களின் அன்புத் தாயார்

அமரர் கிருஷ்ணமூர்த்தி
சகுந்தலாதேவி

அவர்கள் 06.12.2022 அன்று காலமாகிவிட்டார்.
அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன்
அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயருடன்...
பிரதேச செயலாளரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்,
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், பருத்தித்துறை.

தோற்றம்
01.10.1955

மறைவு
06.12.2022

(C-5433)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பத்தில் மூன்று குடும்பங்கள் போதுமான உணவை உண்ணவில்லை


## இலங்கையின் நிலைமை குறித்து ஐ.நா கவலை

(கொழும்பு)

**உணவுப் பாதுகாப்பு தொடர்ந்தும் பிரச்சினைக்குரியதாக காணப்படுவதால் பத்தில் மூன்று குடும்பங்கள் போதுமான உணவை உண்ணவில்லை என ஐ.நா அமைப்பு குறிப்பிட்டுள்ளது.**

மனிதாபிமான விவகாரங்களை ஒருங்கிணைப்பதற்கான ஐ.நா வின் அலுவலகத்தின் ஆசிய பசுபிக்கிற்கான பிராந்திய அலுவலகம் வெளியிட்ட தகவலிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. உணவுப்பாதுகாப்பின்மை, அத்தியாவசியமான மருந்துகளிற்கு பற்றாக்குறை அதிகரித்துவரும் பாதுகாப்பு போன்ற பல காரணிகளால் இலங்கை நெருக்கடியை எதிர்கொள்கின்றது.

இதற்கமைய ஒக்டோபரில் உணவுப் பணவீக்கம் 85.6 வீதமாக காணப்படுவதால் சனத்தொகையில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானவர்கள் தங்கள் தேவைகளை பூர்த்தி செய்வதில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். (நி)



சிவபூமி அறக்கட்டளையினரால் யாழ்ப்பாணம் செம்மணி வாயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்ட 7அடி உயரமான கருங்கற் சிவலிங்கப்பெருமானுக்கு எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.அத்துடன் சிவலிங்கப் பெருமான் எழுந்தருளிய கோவிலுக்கு கலசம் வைக்கும் நிகழ்வும் இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் மற்றும் மதகுருமார்கள் என பலரும் கலந்துகொண்டனர். (படம்-கஜிந்தன்)

## தேர்தல் ஒத்திவைக்கப்பட மாட்டாது

### அமைச்சர் மஹிந்த அமரவீர

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்கும் எண்ணம் அரசாங்கத்திடம் இல்லை உரிய நேரத்துக்குள் தேர்தல் நடத்தப்படும் என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடிகள் இருந்தாலும், உள்ளூராட்சி தேர்தலை பிற்போடும் திட்டம் எதுவும் இல்லை. திட்டமிட்டவாறு தேர்தல் நடத்தப்படும் தங்களுக்குதான் மக்கள் ஆதரவு உள்ளது என மார்தட்டிக்கொள்ளும் எதிரணிகளுக்கும் மக்கள் யார் பக்கம் என்பதை தெளிவாக பார்க்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டு மக்கள் தேர்தலை கோரவில்லை. அரசியல் கட்சிகள்தான் துடிக்கின்றன. நாடு பற்றி எரியும்போது, அதனை அணைப்பதற்கு ஒத்துழைக்காத தரப்புகளுக்கு தேர்தல் ஊடாக மக்கள் பாடம் புகட்டுவார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

## அந்நியச் செலாவணிக்கு வரி அறவிடப்படமாட்டாது

### இலங்கை மத்திய வங்கி

(கொழும்பு)

வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையர்கள் அனுப்பும் அந்நியச் செலாவணிக்கு வரி அறவிடப்பட மாட்டாது என்று இலங்கை மத்திய வங்கி விளக்கம் அளித்துள்ளது.


இலங்கையர்கள் அனுப்பும் அந்நியச் செலாவணிக்கு வரி அறவிடப்படபோவதாக, பரவி வரும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை என மத்திய வங்கி கூறியுள்ளது.

இதேபோன்று இந்தப் பணம் பலவந்தமாக இலங்கை நாணயத்திற்கு மாற்றப்பட மாட்டாது என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், வெளிநாடுகளில் உள்ள இலங்கை ஊழியர்களுக்கு தற்போது வழங்கப்படும் பல்வேறு சலுகைகளை எவ்வித மாற்றமும் இன்றி அதே முறையில் தொடர்ந்து அனுபவிக்க முடியும் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (நி)

## கிழக்கு கொள்கலன் முனையத்தை ஜப்பானிற்கு வழங்க முடிவு- ரணில்

(கொழும்பு)



கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தை ஜப்பானிற்கு வழங்கவுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இலங்கை வர்த்தக சம்மேளனத்தில் ஆரம்பமாகியுள்ள ஸ்ரீலங்கா பொருளாதார உச்சி மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

கிழக்கு கொள்கலன் முனையத்தை உண்மையாகவே அபிவிருத்தி செய்ய விரும்பினால் நாங்கள் அதனை வேறு நாடுகளுக்கு வழங்க வேண்டும், ஜப்பானிற்கு அதனை முதலில் வழங்க முன்வந்துள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜப்பான் ஏற்றுக்கொள்ளாவிட்டால் அதனை வேறு நாடுகளிற்கு வழங்குவோம் என அவர் தெரிவித்துள்ளார். (நி)

## மின்கட்டணத்தை அதிகரிக்காவிட்டால் 6 மணிநேரம் மின்வெட்டு ஏற்படும்

### எரிசக்தி அமைச்சர் காஞ்சன



(கொழும்பு)

அடுத்த வருடம் முதல் மீண்டும் மின் கட்டணத்தை உயர்த்துவது அத்தியாவசியமானது என மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் கூடிய அமைச்சரவையில் அமைச்சர் காஞ்சன விஜேசேகர இந்த அறிவித்தலை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் மீண்டும் மின்கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் என்ற யோசனை தொடர்பில் நேற்று முன்தினம் அமைச்சரவையில் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது.

மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்காமல் மின்சார சபையின் நட்டத்தைக் குறைக்க மாற்றுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த அமைச்சர்கள் சிலர் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

எவ்வாறாயினும், மின்சார கட்டணத்தை அதிகரிக்காமல் தற்போதுள்ள பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என மின்வலு எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

கட்டணத்தை அதிகரிக்காவிட்டால் நாளாந்தம் சுமார் 6 மணிநேரம் மின்வெட்டு ஏற்படும் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு சில நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும், மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் அமைச்சர் அமைச்சரவையில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும், குறித்த கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் இறுதி இணக்கப்பாடு எட்டப்படாமையாலேயே [illegible] யாமல் நிறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.(நி)

## 2023 ஆம் ஆண்டின் முதல் அமர்வு ஜனவரி 17 இல்

(கொழும்பு)

அடுத்த ஆண்டு முதலாவது பாராளுமன்ற அமர்வை எதிர்வரும் ஜனவரி மாதம் 17 ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.


சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன், எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமைக்குப் பதிலாக 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கு இதன் போது தீர்மானிக்கப்பட்டது.

நாளை ஒதுக்கீட்டுச் சட்டமூலம் மூன்றாம் மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு பிற்பகல் 5 மணிக்கு இடம்பெறவுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்திய அணிக்கு அபராதம் விதிப்பு




பங்காளாதேஷிற்கு எதிரான முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி பந்து வீச கூடுதல் நேரம் எடுத்துக் கொண்டது. குறிப்பிட்ட நேரத்தில் 4 ஓவர்கள் குறைவாக வீசி இருந்தனர்.

இதனால் இந்திய அணிக்கு அபராதம் விதிக்கப்பட்டது. போட்டியில் இருந்து பெறும் பணத்தில் 80 சதவீதத்தை அபராதமாக விதித்தது ஐ.சி.சி. (4)

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட போட்டியில் ஆண்களுக்கான 5000 மீற்றர் ஓட்டத்தில் கிளி/முழங்காவில் மகா வித்தியாலய தேசிய பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.கீரன் தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்துக் கொண்டார்.

(படம்-கனகராஜா)



## உலகக்கிண்ண கால்பந்து

# குரேஷியா, பிரேஸில் காலிறுதிக்கு தகுதி



கட்டார் பிபா கால்பந்து உலகக்கிண்ணத் தொடரின், 16 சுற்றுப் போட்டிகளில் வெற்றிபெற்று குரேஷியா மற்றும் பிரேஸில் அணிகள் காலிறுதிக்கு முன்னேறியுள்ளன.

அல் ஜனோப் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில், குரேஷியா அணியும்-ஜப்பான் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில், குரேஷியா அணி, 3-1 என்ற பெனால்டி சூட்-அவுட் முறையில் வெற்றிபெற்று காலிறுதிக்கு முன்னேறியது.

ராஸ் அபு அபவுத் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில், பிரேஸில் அணியும் தென்கொரியா அணியும் மோதின.




இப்போட்டியில், பிரேஸில் அணி 4-1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்கு தகுதிபெற்றது.

எதிர்வரும் 9 ஆம் திகதி எடிவுகேஷன் சிட்டி மைதானத்தில் நடைபெறவுள்ள காலிறுதிப் போட்டியில், குரேஷியா அணியும் பிரேஸில் அணியும் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. (4)




கணேசன்





சங்கவி




யதுசன்




பிரசாம்




கௌரி




நீ தவறு செய்யாவிடினும் மன்னிப்புக் கேள் மன்னிப்பும் மறுக்கப்படுமாயின் திமிராகவே இருந்து விடு இறங்கிப் போவதால் நமது அருமை பிறருக்குப் புரிவதில்லை.

பவித்திரா

உன் வாழ்க்கை முடிந்தது என்று உலகம் முற்றுப்புள்ளி வைக்கும் இடத்தில் மேலும் இரண்டு புள்ளிகளை இட்டு உன் வாழ்க்கையை வாழத் தொடங்கு உன் வாழ்க்கையை முடிவு செய்ய வேண்டியது நீயே அன்றி பிறர் அல்ல

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிவாயு விலை அதிகரிப்பு; உணவு விலைகளில் மாற்றமில்லை

## அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம்

(கொழும்பு)

**எரிவாயு விலை அதிகரிக்கப்பட்ட போதிலும் உணவுப் பொருட்களின் விலையில் மாற்றம் ஏற்படாது என அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

கோதுமைமா உள்ளிட்ட பொருட்களின் விலை குறைக்கப்பட்டுள்ளதால் உணவகங்களுக்கு ஓரளவு நிம்மதி கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



எரிவாயு, கோதுமை மா உள்ளிட்ட பொருட்களின் விலை குறைவினால் உணவுப் பொருட்களின் விலையைக் குறைக்குமாறு உணவக உரிமையாளர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. இருப்பினும் 60 வீதமான உணவகங்கள் விலையை குறைக்கவில்லை என அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இந்த இக்கட்டான நேரத்தில் உணவுகளை நியாயமான விலையில் உணவக உரிமையாளர்கள் வழங்க வேண்டும் என்றும் அச்சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது. (நி)

# டீசல் விலை குறைந்தாலும் பேருந்து கட்டணம் குறையாது

## தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம்

(கொழும்பு)

டீசல் விலை குறைக்கப்பட்டாலும் பேருந்துக் கட்டணம் குறைக்கப்பட மாட்டாது என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஓட்டோ டீசல் ஒரு லீற்றரின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஒரு லீற்றர் ஓட்டோ டீசலின் புதிய விலை 420 ரூபா வாகும்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விலைக்கு அமைய லங்கா ஐ.ஓ.சி நிறுவனத்தின் விலையும் குறைக்கப் பட்டுள்ளது.

எவ்வாறாயினும் ஏனைய எரிபொருட்களின் விலை மாற்றமின்றி தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் டீசல் விலை குறைப்பு தொடர்பில் கருத்துரைத்துள்ள இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன, அது பேருந்துக் கட்டணங்களில் தாக்கம் செலுத்தக் கூடிய அளவில் இல்லை என குறிப்பிட்டார்.

ஒரு லீற்றர் டீசலின் விலை 35 முதல் 40 ரூபாவினால் குறைக்கப்பட்டால் பேருந்துக் கட்டணத்தை குறைக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (நி)

# பாடசாலைகளே இலக்கு; களமிறக்கப்படும் அதிரடிப்படை

(கொழும்பு)

இலங்கையில், பாடசாலைகளுக்கு அருகில் போதை மாத்திரைகள் உள்ளிட்ட பொருட்களை விற்பனை செய்யும் நபர்களை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

அதற்கமைய சிறைச்சாலைகள் மற்றும் அதிவேக நெடுஞ்சாலைகள் என்பவற்றில் கடமையாற்றி வரும் விசேட அதிரடிப்படை உத்தியோகத்தர்கள் மீள அழைக்கப்பட உள்ளனர்.

இவ்வாறு கடமையில் இருந்து மீளெடுக்கப்பட்ட அதிரடிப் படையினரை பாடசாலைகளுக்கு அருகில் கடமையில் ஈடுபடுத்த உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதி பொலிஸ்மா அதிபர் வருண ஜயசுந்தரவின் ஆலோசனைக்கு அமைய போதைப் பொருள் குறித்த முறைப் பாடுகளைச் செய்ய 011 258 0518 இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனை குறித்து 24 மணித்தியாலங்களும் முறைப்பாடு செய்ய முடியும் என விசேட அதிரடிப் படையினர் அறிவித்துள்ளனர். (நி)

# நிதி வசதிகளைப் பெற இலங்கை தகுதியுடையது

## உலக வங்கி அங்கீகாரம்

(கொழும்பு)

சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திடமிருந்து சலுகை விதி முறைகளின் கீழ் நிதி வசதிகளைப் பெறுவதற்கு இலங்கை தகுதியுடையது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அனுமதியை உலக வங்கி அங்கீகரித்துள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும் வாழ்வாதாரத்தை பாதுகாக்கவும் இந்த சலுகை நிதி வசதிகளை உலக வங்கி அங்கீகரித்துள்ளது. ஜனாதிபதி செயலகம் இதனை அறிவித்துள்ளது. (நி)

# இராசிபலன்

07.12.2022
கார்த்திகை 21, புதன்கிழமை
சதுர்த்தசி முற்பகல் 8.32 மணிவரை
கார்த்திகை முற்பகல் 11.17 மணிவரை
சுபநேரம் -4.47-6.17 மணிவரை
இராகுகாலம்- 12.17-1.47 மணிவரை
அமிர்த சித்தம்,
சர்வாலய தீபம்
சந்திராஷ்டமம் சுவாதி

வளவன்




பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், யோகமான நாள், செய்தொழிலில் ஆர்வம் கூடும்.




ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கலாம்.




ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.




உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம்.




உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், பணியில் தீவிரம் காட்டுவீர்கள், தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும்.




தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.




சுப தகவல்கள் வந்து சேரலாம், வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பெற்றோர் மீது பிரியம் கூடும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.




அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எடுத்த செயலை முடிக்க ஒரு முறைக்கு பலமுறை அலைய நேரிடலாம், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.




பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர், அதிகம் செலவாகுமென நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடிவுக்கு வரலாம், பயணங்களால் பலனுண்டு.




கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், வியாபார விரோதம் விலகும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், உடல் நலன் சீராகும்.




பெரிய மனிதர்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள், பகை விலகி பாசம் கூடும், வழிபாட்டால் வளர்ச்சி கூடும், செய்தொழில் மேன்மையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் மிகவும் தெய்வீகமானது சக மனிதர்களிடம் நீங்கள் காட்டும் அன்பும் பரிவும் தான்.

# வெளிநாட்டு டொலருக்கு ஆசைப்பட்டு நாட்டின் வளங்களை அழிக்காதீர்கள்

## அங்கஜன் எம்.பி வலியுறுத்து

(சாவகச்சேரி)

வெளிநாட்டு டொலருக்கு ஆசைப்பட்டு கடைசியில் எம்மிடம் உள்ள கடல் வளத்தையும் அழிக்கும் செயற்பாடு இடம்பெற்று வருவதாக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவசாயம் மற்றும் மீன்பிடி தொடர்பான குழுநிலை விவாதத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் தான் நாட்டின் மூன்றில் ஒரு பகுதி கடல் வளம் காணப்படுகிறது. ஆழ் கடல், குடாக்கடல், தரவைக் கடல் மற்றும் தீவுப்படுக்கைகள் என சகல வளங்களும் வடக்கில் உள்ளன. இந்த இயற்கையின் கொடைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் எமது உள்ளூர் மீனவர்கள் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆனால் இன்று நாட்டுக்கு டொலரை ஈட்டிக் கொடுக்கும் கடல் அட்டைப் பண்ணைகள் வடக்கு மாகாணத்தில் வெகுவாக அதிகரித்துள்ளன. கடலட்டைப் பண்ணைகளால் கரையோர வளங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு எமது மீனவர்கள் கடற்றொழிலில் ஈடுபட முடியாத நிலை காணப்படுகிறது.

கடலட்டைப் பண்ணைகளால் கண்டல் தாவரங்கள் அழிவடைகின்றன. இதனால் மீன்களின் இனப்பெருக்கம் பாதிப்படைகிறது.

50 வருடங்களுக்கு முன்னராக உள்ளூர் தொழிலாளர்கள் எமது கடல்களில் இயற்கையாக கடல் அட்டைகளைப் பிடித்து சந்தைப்படுத்தினார்கள். அதனால் எமது வளங்கள் பாதிப்படையவில்லை.

ஆனால் இன்று அதிகம் ஆசைப்பட்டு உள்ள வளங்களையும் இழக்கும் நிலை காணப்படுகிறது.

எங்கள் வளங்களைப் பாதுகாத்த எமது மக்களுக்கு துரோகம் இழைக்காமலும் எமது வளங்களை அடுத்தவருக்கு தாரை வார்க்காமலும் இருந்தால் மட்டுமே நாட்டின் பொருளாதாரத்தை நீண்ட காலத்திற்கு நிலை நிறுத்த முடியும்.

இதனை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார். (4-6-30)



தொல்புரம் கமநல சேவை நிலையத்தின் 2022/2023 ஆண்டின் 3 ஆவது கட்ட உர விநியோகம் ஆரம்பமாகியுள்ளது. அந்த வகையில் நேற்று அராலி தெற்கு, அராலி கிழக்கு, அராலி மேற்கு, அராலி மத்தி மற்றும் அராலி வடக்கு ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு உர விநியோகம் முன்னெடுக்கப்பட்டது. (படம்:-கஜிந்தன்)

# கட்டுப்பாட்டை இழந்த மு.வண்டி தடம்புரண்டது

(கரணவாய்)

யாழ்.பருத்தித்துறை பிரதான வீதியில் பயணித்த முச்சக்கர வண்டி வேகக் கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டு விபத்துள்ளானது. குறித்த சம்பவம் நேற்று பிற்பகல் இடம்பெற்றது. இதன்போது அதில் பயணித்த பெண்ணொருவருக்கு காயம் ஏற்பட்டது. (4-6-60)

# வேலணை பிரதேச சபையின் பாதீடு நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் 9 மேலதிக வாக்குகளால் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

வேலணைப் பிரதேச சபையின் தவிசாளர் ந.கருணாகரகுருமூர்த்தியால் நேற்று சபையில் பாதீடு சமர்ப்பிக்கப்பட்டது.

20 உறுப்பினர்கள் கொண்ட சபையில் 19 உறுப்பினர்கள் நேற்று வருகை தந்திருந்தனர்.

அதில் ஈ.பி.டி.பியின் 6 உறுப்பினர்களும் பெரமுனவின் 2 உறுப்பினர்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒரு உறுப்பினர் என 9 பேர் பாதீட்டுக்கு ஆதரவாக வாக்களித்ததுடன் ஒரு உறுப்பினர் எதிராக வாக்களித்தார்.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் 8 உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளிநடப்பு செய்ததுடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் ஒருவர் நடுநிலை வகித்தமை குறிப்பிடத்தக்கது. (4)

# ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டிகள் எதிர்வரும் 17 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

ஏல விற்பனையில் பங்குபற்றுபவர்கள் தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளித்தல் வேண்டும். மற்றும் Covid-19 சூழ்நிலை தொடர்பாக சுகாதார அமைச்சினால் விடுவிக்கப்பட்ட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

ஏலத்தில் பொருளினைக் கொள்வனவு செய்பவர் உடனடியாக கொடுப்பனவினை பணமாகச் செலுத்தி ஏலப் பொருளினை அப்புறப்படுத்த வேண்டும். கொடுப்பனவுகள் பணமாக மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதுடன் காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4-6)

# யாழ்.பல்கலையில் மருத்துவ மாணவர் ஆராய்ச்சி மாநாடு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் ஐந்தாவது மருத்துவ மாணவர் ஆராய்ச்சி மாநாடு நேற்று முன்தினம் திங்கட்கிழமை மருத்துவ பீட கூவர் அரங்கில் இடம்பெற்றது.

"ஆராய்ச்சியினூடான ஞானம்- Wisdom through Research" என்ற தொனிப் பொருளில் இடம் பெற்ற இந்த மருத்துவ மாண வர் ஆராய்ச்சி மாநாட்டில் பேர்மிங்ஹாம் பல்கலைக்கழகத்தின் பிரயோக சுகாதார ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த சுகாதார தரவு அறிவியல் மற்றும் பொதுச் சுகாதாரப் பேராசிரியர் கிருஸ்ணராஜா நிரந்தரகுமார் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு முதன்மை உரை யாற்றினார். (4-6-33-104)

# தரம் 5 மாணவர்களுக்கு இன்று இலவச கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களின் நலன் கருதி இலவச கருத்தரங்கு இன்று 7 ஆம் திகதி காலை 9 மணிக்கு சுழிபுரம் விக்டோரியா கல்லூரியின் பிரதானமண்டபத்தில் பாடசாலை அதிபர் சத்தியகுமாரி சிவகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது. இதற்கான ஒழுங்குகளை மன்றத் தலைவர் எஸ்.மகேந்திரன், பொதுச்செயலாளர் எஸ்.கே.தளையரட்ணம் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர். (4-6)

# விநாயகர் விரதம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய விநாயகர் விரதம் நாளை 8 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 28 ஆம் திகதி புதன் கிழமை வரை இடம்பெறவுள்ளது.

இக்காலங்களில் தினமும் காலை 9 மணிக்கு சகஸ்ஹரநாமார்ச்சனையும் பிற்பகல் 4 மணி முதல் பிள்ளையார் கதை பாராயணம், உருத்திரா அபிஷேக ஆராதனை, ஸ்ரீ பஞ்சமுக விநாயகருக்கு விசேட வசந்த மண்டப பூசை, விநாயகர் அகவல் பாராயணம் என்பன நிகழவுள்ளன.

இறுதி நாளான 28 ஆம் திகதி காலை கணபதிஹோமமும் மாலை கஜமுக சூரசங்காரமும் இடம்பெறுமென ஆலய தர்மபரிபாலன சபை அறிவித்துள்ளது. (4)

# வடமாகாண ஆசிரியர்கள் வெள்ளியன்று போராட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநர் செயலகம் முன்பாக பல்வேறுபட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்க இலங்கை ஆசிரியர் சங்கம் தீர்மானித்துள்ளது.

பாடசாலை நிறைவடைந்த பின்னர் பிற்பகல் 2 மணியளவில் குறித்த போராட்டம் இடம் பெறவுள்ளது. யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இலங்கை ஆசிரியர் சங்க உப தலைவர் தீபன் திலீசன் இதனைத் தெரிவித்தார்.

வடமாகாண கல்வியமைச்சில் காணப்படும் சீர்கேடுகள் மற்றும் முறைகேடுகள் தொடர்பாகவும் நிர்வாக ஆளுமையற்ற தன்மை காரணமாகவும் குறித்த போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளோம் என மேலும் தெரிவித்தார். (4-6-33)



வடமாகாண விவசாய நவீனமயமாக்கல் செயற்றிட்டப் பணிப்பாளரின் தலைமையில், யாழ்.மாவட்ட நவீன விவசாய உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்கள் சங்கம் இணைந்து யாழ். மாவட்டத்தில் நவீனமுறை உள்ளீட்டு உபகரணங்களை வழங்கி வைத்துள்ளன. இதில் சுமார் 190 விவசாயிகள் கலந்து கொண்டிருந்ததோடு சுமார் 190 மில்லியன் ரூபாய் பெறுமதியான பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டன. (படம்:-கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### வரவு-செலவுத் திட்டம் மீதான

# இறுதி வாக்கெடுப்பின் போது போராட்டம் நடத்தத் திட்டம்

## புலனாய்வுத் தகவலை அடுத்து தயாராகும் படைகள்

(கொழும்பு)

வரவு - செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு நாளை நடைபெறும் நிலையில் பாராளுமன்றத்தைச் சுற்றி தொடர் போராட்டங்களை நடத்துவதற்கு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் உள்ளிட்ட அரசியல் அமைப்புக்கள் உள்ளகத் தயார்படுத்துவது குறித்து பாதுகாப்புத் தலைவர்கள் அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளனர்.

செலவுத் திட்ட இறுதி விவாதத்திற்கு வரும் மக்கள் பிரதிநிதிகளை வழி மறிப்பது, அழுத்தம் கொடுப்பது உள்ளிட்ட பல திட்டங்களில் ஈடுபடவுள்ளமை இதன் மூலம் தெரியவந்துள்ளது.

இதன்படி, பாராளுமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிப்பவர்களை கைது செய்யுமாறு சபாநாயகரின் தலையீட்டின் ஊடாக நீதிமன்ற உத்தரவைப் பெற்றுக்கொள்ளுமாறு மேல் மாகாணங்களுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படும் பட்சத்தில் கைது செய்யப்படும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு பிணை வழங்கப்படுவதைத்தடுக்க தேவையான நடவடிக்கைகளை எடுப்பது குறித்தும் பொலிஸ் மா அதிபர் தலைமையிலான பாதுகாப்புத் தலைவர்கள் கலந்துரையாடியுள்ளனர். (நி)

# உலக உணவுப் பாதுகாப்பில் இலங்கை மேலும் வீழ்ச்சி

## எதிர்க்கட்சி சுட்டிக்காட்டு



(கொழும்பு)

உலக உணவுப் பாதுகாப்பில் 65 ஆவது இடத்தில் இருந்த இலங்கை இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் 75 ஆக வீழ்ச்சியடைந்துள்ளதாக எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றியபோதே ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

வெளிநாடுகளில் இருந்து 7 இலட்சம் மெற்றிக் தொன் அரிசி கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் இன்று விவசாயிகள் அரிசியை விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். விவசாயிகள் அதிகம் உள்ள பொலன்னறுவை இன்று போஷாக்கு குறைபாடுள்ள மாவட்டமாக மாறியுள்ளது

ஒரு கிலோ நெல் உற்பத்தி செய்வதற்கு நூறு ரூபாவுக்கு மேல் செலவாகும் நிலையில் ஒரு கிலோ நெல் 90 ரூபாவிற்கும் குறைவாகவே விற்பனை செய்யப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (நி)

# மோதலால் கல்வியை இழக்கும் 54 பல்கலைக்கழக மாணவர்கள்

(கொழும்பு)

ருஹுணு தேசிய கல்வி பீடத்தில் இடம்பெற்ற மாணவர் மோதலுடன் தொடர்புடைய 54 மாணவர்கள் தமது கல்வியைத் தொடரும் வாய்ப்பினை இழந்துள்ளனர்.

அந்த மோதல் தொடர்பில் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் தலைமையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த நவம்பர் 26 ஆம் திகதி ருஹுணு கல்வி பீடத்தில் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் காயமடைந்த 12 மாணவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றிருந்தனர்.

சம்பவம் தொடர்பில் கல்வி அமைச்சு விசேட அவதானம் செலுத்தியுள்ளதாக கல்லூரி ஆண்ணயாளர் ரஞ்சித் சந்திரசேகர கூறினார்.

அத்தோடு ஆசிரியர் கல்வியில் ஈடுபடும் மாணவர்களின் ஒழுக்கத்தை பேணுவதற்கான அதிகபட்ச நடவடிக்கைகளை கல்வி அமைச்சு பின்பற்றி வருவதாகவும் அவர் தெரிவித்தார். (நி)


5 நாட்களில் நீங்கள்
விரும்பியவர்களுக்கான கேக்கை நீங்களே வீட்டில் செய்யலாம்.
எங்களின் கேக் தயாரிப்பு வகுப்பில் இப்பொழுதே இணைந்து கொள்ளுங்கள்.

- Eggless cake
- Chocolate sponch cake
- Vannila cake
- Cupes cake
- Royal icing
- Butter cream
- Hard butter
- Kesari
- Piping cream
- Chocolate drip

5 நாட்கள் work shop நடைபெறும். வார நாட்கள் மற்றும் வார இறுதி நாட்கள்
யாழ்ப்பாணம், புத்தூர்
ஆகிய இடங்களில் வகுப்புகள் நடைபெறும்.





விண்ணப்பம் இலவசம்
கட்டணம் = 12000/=

And mehandi art classes
Starting from basics
One side mehandi
Full hand
Bridal mehandi

✔ Cake delivery also available
✔ Cake making and mehandi art
At sham's unique

Puttur West,
Somascanda College Lane,
Puttur Jaffna.

077 794 8204

(13703)



பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2022
16 Days of Activism against Gender Based Violence
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

"ஏன் என் உரிமைக்காகவும், விடுதலை வேட்கைக்காகவும் நான் போராட வேண்டும், என்னை உங்களின் உயரிய உறவுகளில் ஒருத்தியாய் நினைப்பீர்களானால்!...
மாற்றம் வெறும் வார்த்தைகளினால் மட்டுமல்ல உன்னத எண்ணங்களினாலேயே சாத்தியமாகும்"...

JSAC 16 2022

(C-5323)

யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center (JSAC)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1980 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 2<br>கி.பா: 9 சூரி 9 செவ் 10 இல்<br>உயரம்:5' 3"<br>தகைமை/தொழில்:கமம் (வியாபாரம்)<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/13193 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 4<br>கி.பா:33 ½ சூரி 8 செவ் 6 இல்<br>உயரம்: 162 cm<br>தகைமை/தொழில்:MBBS வைத்தியர்<br>எதிர்பார்ப்பு:உயர்பதவி<br>தொ.இ:G/11445 |
| பிறப்பு:1995 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 2<br>கி.பா:சூரி 10 செவ் 12 இல்<br>உயரம் :176 cm<br>தகைமை/தொழில்:A/L சொந்தக்கடை<br>எதிர்பார்ப்பு:படித்த பெண்<br>தொ.இ: B/13194 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்:பூராடம் 1<br>கி.பா:23 சூரி 12 செவ் 1 இல்<br>உயரம்:5' 3"<br>தகைமை/தொழில்:பொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ:G/11448 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 1<br>கி.பா:சூரி 3 செவ் 2 இல்<br>உயரம்: 173 cm<br>தகைமை/தொழில்: A/L காணி உத்தியோகத்தர் (அரச)<br>எதிர்பார்ப்பு:அரச, தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/13196 | பிறப்பு:1975 இந்து<br>நட்சத்திரம்:பூராடம் 4<br>கி.பா:44 சூரி 10 செவ் 7 இல்<br>உயரம்:5' 2"<br>தகைமை/தொழில்:ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:உத்தியோகம் அல்லது சொந்தத் தொழில் உள்நாடு மட்டும்<br>தொ.இ: G/11455 |
| பிறப்பு:1984 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 1<br>கி.பா:சூரி 1 செவ் 3 இல்<br>உயரம்:5' 11"<br>தகைமை/தொழில்:A/L உதவி முகாமையாளர் (தனியார்)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/13197 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: மகம் 4<br>கி.பா:17 ¾ சூரி, செவ் 11 இல்<br>உயரம்:150 cm<br>தகைமை/தொழில்: அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் உள்நாடு மட்டும்<br>தொ.இ: G/11457 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை சிறுமிகள் மீது கத்திக்குத்து ஒருவர் உயரிழப்பு-ஜேர்மனியில் சோகம்

(பேர்லின்)

தெற்கு ஜேர்மனியில் பாடசாலைக்கு நடந்து சென்று கொண்டிருந்த இரு சிறுமிகள் மீது கத்திக்குத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.





நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை இல்லர் கிர்ச்பெர்க் நகரத்திலுள்ள அகதிகள் தங்குமிடத்திலிருந்து வெளியே வந்த இளைஞர் ஒருவர் இந்த தாக்குதலை நடத்தியதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த தாக்குதலின் போது 14 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 13 வயதுடைய மற்றுமொரு சிறுமி படுகாயமடைந்துள்ளார்.

ரித்திரியாவைச் சேர்ந்த புகலிடம் கோரி வந்த 27 வயது இளைஞரை ஜேர்மன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அதிகாரிகள் அருகிலுள்ள கட்டடத்தை சோதனையிட்ட போது, தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் கத்தியுடன் அவர் இருப்பதைக் கண்ட பொலிஸார் அவரை கைது செய்தனர். மேலும் இருவர் கைது செய்யப்பட்டனர். (நி)

# கொலம்பியாவில் மண்சரிவு 34 பேர் உயிரிழப்பு

(கொலம்பியா)

கொலம்பியாவில் மண்சரிவினால் பேருந்து மற்றும் வேறு சில வாகனங்கள் மண்ணில் புதைந்ததால் குறைந்த பட்சம் 34 பேர் உயிரிழந்துள்ளனர் என அவசரசேவைப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொலம்பியாவின் வட பிராந்தியத்திலுள்ள நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காலி எனும் நகரில் பேருந்து ஒன்று மண்சரிவில் சிக்கியது.

இதனால் பேருந்திலிருந்த 25 பயணிகளில் பெரும்பலானோர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த பெண்ணொருவரின் கரங்களில் அணைத்துக் கொள்ளப்பட்டிருந்த நிலையில் குழந்தையொன்று மீட்கப்பட்டதாக ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

வேறு வாகனங்களிலிருந்த சிலரும் மண்ணில் புதையுண்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி)

# சுந்தர் பிச்சைக்கு பத்ம பூஷன் விருது



(கலிபோர்னியா)

கூகுள் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சுந்தர் பிச்சைக்கு பத்ம பூஷன் விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்த விருது வழங்கும் நிகழ்வு கலிபோர்னியாவில் நடைபெற்றது. அமெரிக்காவிற்கான இந்தியத் தூதுவர் இந்த விருதை வழங்கி வைத்தார்.

இதன்போது, இந்திய அரசுக்கும் இந்திய மக்களுக்கும் நன்றி தெரிவித்த சுந்தர் பிச்சை, கூகுள் நிறுவனம் இந்தியாவின் தொழில்நுட்ப வளர்ச்சிக்காக 10 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கவுள்ளதாக குறிப்பிட்டார். (நி)

# கட்டாரில் நடைபெற்ற ஒட்டக அழகுப்போட்டி

(டோஹா)

கட்டாரில் பிபா உலகக் கிண்ண கால்பந்துப் போட்டிகள் தற்போது நடைபெற்று வரும் நிலையில் அங்கு நடத்தப்பட்ட மற்றொரு போட்டியும் மக்களை வெகுவாக கவர்ந்தது.



அங்கு ஒட்டகங்களின் அழகுப் போட்டியும் மிகவும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

இந்த போட்டியில் உலகின் மிக அழகான ஒட்டகம் வெற்றியாளராக தேர்வு செய்யப்பட்டது. பல நாட்கள் நடந்த இந்தப் போட்டியில் 700 இற்கும் மேற்பட்ட ஒட்டகங்கள் பங்கேற்றன.

இந்த ஒட்டகப் போட்டி மத்திய கிழக்கு முழுவதும் தொடர்ந்து நடத்தப்படுகின்றன.

இவ்விழாவில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பிடிக்கும் ஒட்டகங்களுக்கு கோப்பைகள் வழங்கப்படுகின்றன.

அவற்றின் உரிமையாளர்களுக்குப் பணப் பரிசும் வழங்கப்பட்டது. நஜா என்ற ஒட்டகம் முதல் இடத்தைப் பிடித்தது. அதன் உரிமையாளருக்கு 200,000 கட்டார் ரியால்கள் பரிசுத் தொகையாக வழங்கப்பட்டது.

இந்த அழகுப் போட்டியில் கலந்துக் கொள்ளும் அனைத்து ஒட்டகங்களும் போட்டிக்கு முன்னதாக முழுமையாக பரிசோதிக்கப்பட்டன.

இந்த போட்டியின் ஒட்டகங்கள் அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்படவில்லையா அல்லது ஒப்பனை செய்யப்பட்டுள்ளனவா என்று சோதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பல்கலை மாணவர்கள் எழுவருக்கு மியன்மாரில் மரணதண்டனை விதிப்பு

(மியன்மார்)

மியன்மாரில் பல்கலைக் கழக மாணவர்கள் 7 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அந்த நாட்டு இராணுவ நீதிமன்றினால் இந்த மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் தெரிவித்துள்ளார்.

வங்கியில் துப்பாக்கிச்சூடு நடத்தியதாக குற்றம் சாட்டி அவர்களுக்கு இந்த மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் மாணவர்கள் தவிர மேலும் 4 இளைஞர்களுக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. நியாயமான விசாரணையின் அடிப்படை கோட்பாடுகளை மீறியும் சுதந்திரம் மற்றும் பாரபட்சமின்மைக்கான முக்கிய நீதித்துறை உத்தரவாதங்களுக்கு முரணான வகையிலும் இராணுவம் உத்தரவுகளை பிறப்பித்து வருவதாகவும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் குறிப்பிட்டுள்ளார்.

மியன்மாரில் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் இராணுவம் ஆட்சியை கைப்பற்றியதில் இருந்து 100 இற்கும் மேற்பட்டோருக்கு இராணுவ நீதிமன்றினால் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இராணுவ ஆட்சிக்கு எதிரானவர்களை ஒடுக்குவதற்கு மரண தண்டனையை ஓர் ஆயுதமாக மியன்மார் இராணுவம் பயன்படுத்துவதாக ஐக்கிய நாடுகள் சபை குற்றம் சாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# எட்டு வாரங்களில் எட்டாவது முறையாக உக்ரைன் முழுவதும் ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல்

(மொஸ்கோ)

எட்டு வாரங்களில் எட்டாவது முறையாக உக்ரைன் முழுவதும் உள்ள இலக்கு களை நோக்கி ரஷ்யா சரமாரியாக ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியுள் ளது.

இந்தத் தாக்குதல்களில் நான்கு பேர் உயிரிழந்துள்ளதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

ரஷ்யா வீசிய 70 ஏவுகணைகளில் 60 ஏவுகணைகளை சுட்டு வீழ்த்தியதாக உக்ரைன் தெரிவித்துள்ளது. ஆனால், திட்டமிடப்பட்ட 17 இலக்குகளையும் தாக்கியதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் இந்த தாக்குதல்கள், அண்டை நாடான மால்டோவாவில் மின்சார விநியோகத்தை பாதித்துள்ளதாக உக்ரைனிய ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார். (நி)

# ஜப்பானில் பறவைக்காய்ச்சல் பரவல் 3 இலட்சம் கோழிகள் அழிப்பு

(டோக்கியோ)

ஜப்பானின் ஆய்ச்சி மாகாணத்தில் உள்ள ஒரு கோழிப்பண்ணையில் வழக்கத்துக்கு மாறாக அதிக எண்ணிக்கையில் கோழிகள் இறந்தன.

இதைத் தொடர்ந்து இறந்து போன கோழிகளை பரிசோதித்ததில் அவற்றில் பெரும்பாலானவை பறவைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு இறந்தது தெரிய வந்தது. இது அங்கு பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆய்ச்சி மாகாணத்தில் 11 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது பறவைக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளதாக உள்ளூர் அதிகாரிகள் கூறுகின்றனர்.


பறவைக் காய்ச்சல் மேலும் பரவுவதை தடுக்கும் விதமாக மாகாணம் முழுவதிலும் சுமார் 3 இலட்சத்து 10 ஆயிரம் கோழிகளை அழிக்க அதிகாரிகள் முடிவு செய்து அதற்கான பணிகளை தொடங்கியுள்ளனர்.

இதே போல் கோஹிமா மாகாணத்திலும் பறவைக் காய்ச்சல் காரணமாக 34 ஆயிரம் கோழிகள் அழிக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஜப்பானில் கடந்த ஒக்டோபர் மாத இறுதியில் இருந்து பறவைக் காய்ச்சல் பரவி வருவதும் இதுவரை 33 இலட்சம் கோழிகள் அழிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை






டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**தாரவரவியற் பெயர்- Cynodon dactylan**
**குடும்பம்-Poeceae**

அறுகம்புல் ஆனது மழை பெய்தவுடன் நன்கு தழைத்து தானே வளரும். அறுகை எனவும் குறிப்பிடப்படும் அறுகம்புல் பெரிதும் அடிமட்டத் தண்டில் இருந்து தான் வளரும். நுனியில் குருத்து மேல்நோக்கி வளர்ந்து வரும்.

இவ் அறுகம்புல்லானது இறவாமல் என்றும் நிலைத்து வளர்ந்து வாழ்ந்து வருவது எதனால் என்பதை இந்நாளில் ரஷ்ய நாட்டு உயிரியல் அறிஞர்கள் ஆராய்ந்துள்ளனர். இப் புல்லின் வளருங் குருத்தில் உள்ள செல்களை நுண்ணோக்கி மூலம் காணும்போது அவற்றின் செல்லின் கரு (நியூக்கிளியஸ்) அதில் உள்ள "நியூக்கிளிலோலஸ்" என்ற உட்கருவை எலக்ரோன் நுண்ணோக்கி மூலம் ஏறத்தாழ 20 ஆயிரம் முதல் 50 ஆயிரம் மடங்கில் பெரியதாக்கி பார்க்குமிடத்து அவற்றிலுள்ள குரோமோசோம்களின் டி.என்.ஏ. ஆர்.என்.ஏ என்னும் மூலக்கூற்று அமிலங்கள் தென்படும்.

அவற்றின் பாரம்பரியத்தை தொடரச் செய்தும் ஆர்.என்.ஏ அமிலத்தின் மூலக்கூறு கணந்தோறும் சிதைந்து கொண்டுவருவதையும் அவற்றை உடனுக்குடன் சரிபார்த்து சீர்ப்படுத்தும் மிக அற்புதமான சுரப்பி நீர் இம் மூலக்கூற்று அமிலத்தாலேயே உண்டாக்கப்படுகின்றது என்பதையும் அவையே சிதைந்து மூப்பைத்தரும் ஆர்.என்.ஏ அமிலத்தின் மூலக்கூற்றினை சிதையாமல் கணம் தோறும் செப்பனிடுகிறது என்பதனையும் மிகத் துல்லியமாக ஆராய்ந்துள்ளனர். இந்த அற்புத சுரப்பி நீர் வேறு எந்த விதமான உயிர்களின் "நியூக்கிளியோலஸ்"களிலும் உள்ள ஆர்.என்.ஏ அமிலத்திலும் உண்டாவதில்லையா? குப்ரவில்பு எனும் ரஷ்யப் பேராசிரியர் (பயிலோ ரஷ்யன் அக்கடமி அப்சயன்ஸ்) கூறுகிறார். சித்த மருத்துவத்தில் அறுகானது காயகல்ப மூலிகை என்பதும் சிறப்பம்சமாகும்.

அறுகம் வேரை கணு போக்கி பத்து கிராம் எடுத்து, மிளகு 5 கிராம் சேர்த்து 4 மடங்கு நீர் விட்டு காற்பங்காக குடிநீர் காய்ச்சி, 30-60 மில்லியளவு காலை, மாலை 15 நாட்களுக்கு ஒரு தடவை குடித்து வர உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

அறுகம்வேரை கழுவி .சிதைத்து அரைத்து ஐந்து கிராம் அள்வு 100 மில்லி காய்ச்சிய பசுவின் பாலில் கலந்து குடிக்க பெண்களுக்கு ஏற்படும் வெள்ளைசாய்தல் குணமாகும்.

அறுகம்புல்லின் ஊறல் குடிநீர் 100 மில்லி, 100 மில்லி காய்ச்சிய பசுவின் பாலில் கலந்து குடித்துவர கண்ணோய் , கண் புகைச்சல், தலைப்பாரம் நீங்கும். இரத்தம் சுத்தியாகும். அறுகம்புற்களை வேருடன் சேகரித்து நன்கு கழுவி வெட்டி,- உலர்த்தி,பொடித்து 5 கிராம் அளவு காலை,மாலை வெந்நீரில் அருந்திவர நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்படும் உடல் பலவீனத்தைப் போக்கி உடற் பலத்தை அதிகரிக்கச் செய்யும்.

அறுகம்புல் வேரைக் காய வைத்து பொடி செய்து ஒன்றுக்கு 5 மடங்கு வீதம் நல்லெண்ணெய் கலந்து சூடுபடுத்தி உடலில் தேய்த்து குளித்தால் தோல் நோய்கள் வராது. அத்துடன் தோல் மிருதுவாகவும் பளபளப்பாகவும் இருக்கும்.

அறுகம்புல்லை வேருடன் சேகரித்து கழுவி இடித்து சாறு எடுத்து 60 மில்லி அளவு தினமும் காலையில் குடித்துவர நீரிழிவு கட்டுப்படும். அறுகம்வேர் 2 கிராம், வெண்ணெய் 5 கிராம் அளவு தினமும் சாப்பிட்டுவர உடற்சூடு தணியும். அறுகம்புல்லில் காணப்படும் ஒருவித புரதச் சத்து உடற்பலத்தை அதிகரிக்கச் செய்யும். வீட்டில் நீங்கள் பாயாசம் காய்ச்சும்போது அறுகம்புல்சாறு கலந்து காய்ச்சி அறுகம் பாயாசமாக அருந்திவர உடற்பலம் அதிகரிப்பதோடு உடலின் நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கச் செய்யும். அறுகம்புல்லை வேருடன் பிடுங்கி கழுவி மஞ்சள் சேர்த்து அரைத்து பூசிவர சொறி, சிரங்கு, படர்தாமரை நீங்கும். தோல் மிருதுவாக வரும்.

**அறுகம்புல் டொனிக்**

அறுகம் புல்-3 கப்,தேன்-500 மில்லி ,பசு நெய் -100 கிராம்

இரும்பு வாணலியில் அறுகம்புல் சாறு , தேன், நெய் கலந்து சிறு தீயிட்டு விறகடுப்பில் வைத்துக் காய்ச்சி பாகுபதம் வந்து நீரின் சடசடப்பு அடங்கியதும் ஐந்து நிமிடம் கழித்து இறக்கவும்.

இதனை ஒரு வாரம் வெயிலில் வைத்து எடுத்து பின்பு தினமும் காலை,மாலை ஒரு தேக்கரண்டி குழந்தைகளுக்கு கொடுத்து வரவும். இதனால் கணச்சூடு, சளி தணிந்து குழந்தைகள் சுறுசுறுப்பாக வளருவார்கள்.

**அறுகம்புல் பாயாசம்**

இதற்கு அறுகம்புல்லை சுத்தம் செய்து அலசி பொடியாக அரிந்து 1 கப் , பசுப்பால் 1/2 லீற்றர்,க்சகசா 25 கிராம்,சீனி 300 கிராம் , ஏலக்காய் 6; முந்திரிப்பருப்பு 100 கிராம், உப்பு சிறிதளவு , ப்சுநெய் 20 மில்லி

அறுகம்புல்லை முதலில் மைய அம்மியில் வைத்து அரைக்க வேண்டும். கசகசாவை மை போல அரைக்க வேண்டும் ( நீரில் ஊறவைத்து) பாலை அடுப்பில் ஏற்றி மேற்குறித்த இரண்டையும் இட்டு 250 மில்லி நீரில் கரண்டியினால் கலந்து கொண்டே இருக்க வேண்டும்.

சீனியையும் போட்டு ஏலக்காய் தூளையும் சேர்த்து கிளறி இறக்கவும். இந்தப் பாயாசம் சுவையாகவும் நல்ல மணமுள்ளதாகவும் இருக்கும். இளஞ்சூடாக இப் பாயாசத்தை அருந்துவதால் உடல்,கண்கள் அனைத்தும் குளிர்ச்சி அடையும். உடற்சூடு தணியும்.இதைவிட அக்கி நோய் , அம்மைபோட்ட காலங்களிலும் இதனைப் பயன்படுத்தலாம்.

அறுகம்புல்லை வேருடன் பிடுங்கி கழுவி இடித்து சாறு எடுத்து அதில் 300 மில்லி சாறிற்கு 300 மில்லி சுத்தமான தேங்காய் எண்ணை சேர்த்து வாணலியில் இட்டு கலக்கி அடுப்பேற்றி சிறு தீயில் எரித்து மெழுகுப்பதத்தில் வார்த்து ஆறவிட்டு தலைக்கு வைத்து வர பொடுகு நீங்கும்.

# அதீத அரையிறகிகள்:நுண்ணுயிர்க்கொல்லிகளின் எதிரிகள்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

சுப்பர் பக்ஸ் [Super bugs] என்னும் அதீத அரையிறகிகள் என அழைக்கப்படும் நுண்ணுயிர்க் கொல்லிகளை எதிர்க்கும் நுண்ணங்கிகளை குறிப்பாக பக்ரீறியாக்களைப் பற்றி உலகம் மீண்டும் கவனங் கொள்ளத் தொடங்கியிருக்கின்றது.

இந்த வாரத்தை நுண்ணியிர்க் கொல்லிகளின் எதிரிகளைப் பற்றியதான விரிவாக்கத்தையும் விளக்கத்தையும் உலக மக்களுக்கு தெரியப்படுத்தவும் அவர்களை இவ்வாறான நுண்ணுயிர்க்கொல்லி எதிரிகளிலிருந்து காப்பாற்றும் முன்னேற்பாட்டு நடவடிக்கையாக சுப்பர் பக்ஸ் என்பனவற்றைப் பற்றிய தெளிவினை கொடுக்கும் செயற்பாடுகள் உலகமெங்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அதன் ஓரங்கமாக இக் கட்டுரை உங்களை வந்து சேர்ந்துள்ளது. இதனை முழுவதுமாக வாசித்து இவற்றைப் பற்றிய புரிந்துணர்வை உங்கள் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அவசியம் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**வருமுன் காப்போம்**

நுண்ணங்கிகளால் ஏற்படும் நோய்களை வருமுன் காப்பதே சிறந்தது. நோயேற்பட்ட பின்பு அதனைக் கட்டுப்படுத்துவது என்பது சுலபமான காரியமல்ல. அதிலும் நுண்ணுயிரெதிரிகள் [Antibiotics]நோயேற்படுத்தும் காரணிகளான பக்ரீறியாக்கள் போன்றனவற்றை கட்டுப்படுத்துவதற்காக பயன்படுத்தப்படுகின்றன. இவற்றை நாம் மருத்துவரின் பரிந்துரையின்றி பயன்படுத்தக் கூடாது.



தேவையற்ற வகையில் தேவையற்ற நோயின் தன்மைக்காக நுண்ணுயிரெதிரிகளை அவசியமின்றி பயன்படுத்துவதனை தவிர்த்துக் கொள்வது மிகவும் அவசியமானதாகும்.

எதனையும் வரமுன் காப்பதென்பது மிகவும் புத்திசாலித்தனமான செயற்பாடாகும். நோய் ஏற்பட்ட பின்பு அதனை வளரவிட்டு பின்னர் கட்டுப்படுத்துவதென்பது மிகவும் சிரமமானதும் பல வேலைகளில் கட்டுப்படுத்த முடியாமலும் போய்விடும். அனைத்து நோய்களுக்கும் மருந்துகள் இல்லை என்பதனை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். அதிலும் வைரஸிற்கு இதுவரையிலும் எதிர்ப்பு மருந்துகள் உலகெங்கிலும் கண்டுபிடிக்கப்படவில்லை.

**வைரஸின் தாக்கம்**

வைரஸ்களினால் ஏற்படுத்தப்படும் நோய்களை கட்டுப்படுத்துவது சிரமமானதாகும். கொவிட் வைரஸின் தாக்கத்தின் வீரியம் பற்றி நாம் அனைவரும் அனுபவித்து இருக்கின்றோம். வைரஸ்களைக் கட்டுப்படுத்துவதற்கான நேரடியான மருந்துகள் எதுவும் இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதே நிதர்சனம்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

இது அவ்வர்றிருக்க தொற்றுதலாகும் வைரஸ் நோய்களிலிருந்து எம்மை அவசியம்' காப்பாற்றிக் கொள்ள நாம் முன்னேற்பாடான நடவடிக்கைக்ளையே பெரிதும் பின்பற்ற வேண்டியிருக்கின்ற நிலையில் மக்களுக்கு இதுபற்றி இன்னும் விரிவான விளக்கங்களை கொடுப்பதன் மூலம் அனைவரையும் இவ்வாறான உயிர்க்கொல்லி தொற்று நோய்களிலிருந்து காப்பாற்றிக் கொள்வதற்கான நடவடிக்கைகளில் அனைவரும் முன்வந்து இணைந்து கொள்ளல் வேண்டும்.

கொவிட் வைரஸின் தாக்கம் மீண்டும் சீனாவின் வூகான் மாகாணத்தில் பரந்துபட்டு பரவத் தொடங்கியிருப்பது இங்கு அவசியம் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

கொவிட் வைரஸ் ஆரம்பமான அதே மாகாணத்தில் இன்னும் இவ் வைரஸின் தாக்கம் தொடர்ந்தும் உணரப்பட்டு பலர் மீண்டும் மீண்டும் இக் கொடிய வைரஸ் தாக்கத்திற்குள் சிறைப்பட்டிருக்கும் செய்தி எமக்கு பேரிடியானதாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருந்துத் தட்டுப்பாட்டை நீக்கக் கோரி வடக்கு-கிழக்கில் நேற்று போராட்டங்கள்








(யாழ்ப்பாணம்)

அத்தியாவசிய மருந்துகள் மற்றும்மருத்துவ சாதனங்கள் உடனடியாக மக்களுக்கு கிடைக்க வழி செய்ய வேண்டும் எனக் கோரி இலங்கை ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைத்து கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை வடக்கு- கிழக்கில் முன்னெடுக்கப்பட்டது. வடக்கு- கிழக்கு பெண்கள் ஒன்றியத்தினால் , முன்னெடுக்கப்பட்ட குறித்த போராட்டத்தில், அத்தியாவசிய மருந்து வகைகளும் மருத்துவ சாதனங்களும் மக்களுக்கு கிடைக்க வேண்டும், மருந்துகளை உடனடியாக பெற வழி வகை செய்ய வேண்டும், பெணகளின் சுகா தார உரிமை உறுதிப்படுத்த வேண டும், சுகா தார உரிமை எமது உரிமை போன்ற வாசக ங்கள் அடங்கிய அட்டைகளு டன் போராட்டத்தில் கலந்து கொண்டனர். (4-6-33-10-100-285-299)



ஓமானில் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட பெண்களை காப்பாற்றுமாறு கோரி நேற்று முன்தினம் வவுனியாவில் கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப் பட்டது. வவுனியா இலுப்பையடி சந்தியில் இடம்பெற்ற இவ் கவனயீர்ப்புப் போராட்டத்தினை சமகி வனிதா பலவேகய அமைப்பினர் முன்னெடுத்திருந்தனர்.

# கடலட்டைப் பண்ணைத் திட்டத்தை மீள்பரிசீலனை செய்ய வேண்டும்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் 5000 கடலட்டைப் பண்ணைகளை அமைக்கும் கடற்றொழில் அமைச்சரின் முயற்சிபல்வேறு சிக்கல்களைத் தோற்றுவிக்கும் என்றும் அத்தகைய சிக்கல்கள் தோன்றாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டியது அமைச்சரின் பொறுப்பாகும் என்றும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் த்லைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் க.பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயம் குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

வடக்கு மாகாணத்தில் கடலட்டைப் பண்ணைகள் மிகப் பெருமளவில் உருவாக்கப்பட்டு வருகின்றன. கடற்றொழில் அமைச்சர்,தற்பொழுது ஏறத்தாழ ஆயிரத்து 200 கடலட்டைப் பண்ணைகள் இருப்பதாகவும் இந்தப் பண்ணைகளை ஐயாயிரமாக உயர்த்த வேண்டுமென்றும் அதற்கான நடவடிக்கைகளைத் தான் எடுப்பதாகவும் ஊடகங்களூடாக செய்திகளை வெளியிட்டுள்ளார்.

கடலட்டைகள் என்பது மிக விலை மதிப்புள்ள ஏற்றுமதிப் பொருள் என்பதில் மாற்றுக் கருத்துகள் இல்லை. முன்னரும் பாக்குநீரிணை மற்றும் மன்னார் வளைகுடாவிலிருந்து கடலட்டைகள் பிடிக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆனால் இப்பொழுது கடலட்டைப் பண்ணைகளை உருவாக்கி,அதன் மூலம் பாரிய அந்நியச் செலாவணியைக் கொண்டு வர முடியுமென்றும் குறுகிய காலத்திற்குள் மீனவர்கள் பெரும் பணம் படைத்தவர்களாக மாறலாம் என்றும் அமைச்சரினால் ஆசை வார்த்தைகள் கூறப்படுகின்றது.

கடலட்டைப் பண்ணைகள் அமைப்பதற்கென்று சில வரைமுறைகள் இருக்கின்றன. இரண்டு கடலட்டைப் பண்ணைகளுக்கு இடையில் ஏறத்தாழ 1000மீ இடைவெளி இருக்க வேண்டும் என்று கூறப்படுகின்றது. உருவாக்கப்பட்டுள்ள பண்ணைகளில் அத்தகைய இடைவெளியில்லை என்பது மீனவர்களின் குற்றச்சாட்டுகளாக இருக்கின்றது. இரண்டாவதாக அப் பிரதேசங்களில் உள்ள மீனவர்களுக்கு பண்ணைகளை வழங்குவதை விடுத்து அப்பிரதேச



ங்களைச் சாராதவர்களுக்கும் வெளியாட்களுக்கும் அந்தப் பண்ண்ணைகள் வழங்கப்படுவதாகவும் குற்றச்சாட்டுகள் எழுகின்றன.

மூன்றாவதாக குறுகிய காலத்திற்குள் வருமானம் ஈட்ட முடியுமென்று மீனவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். ஆனால் புத்தளம்,சிலாபம் போன்ற இடங்களில் இறால் பண்ணையில் ஏற்பட்ட இழப்புகள் கடலட்டைகள் பண்ணைகளுக்கும் ஏற்படலாம் என்ற அச்சமும் ஐயமும் தோன்றியுள்ளது. கடலட்டைப் பண்ணைகளைத் தோற்றுவிப்பதன் ஊடாக, பாரம்பரியமாக எமது மீன்பிடி,அதனூடாக வடக்கு மாகாணம் பெற்று வந்த கடலுணவுகள், ஆயிரக்கணக்கான கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரங்கள் இவையெல்லாம் அழிந்து விடுமோ என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது என மேலும் தெரிவித்தார்.(4-6)

# மானிப்பாய் பிரதேச சபையின் பாதீடு நிறைவேற்றம்

(அராலி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட மானிப்பாய் பிரதேச சபை வரவு -செலவுத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது:

2023 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தை நேற்று செவ்வாய்க்கிழமை மானிப்பாய் பிரதேச சபையின் தவிசாளர் அ. ஜெபநேசன் சபையில் சமர்ப்பித்தார்.

இதன்போது வரவு -செலவுத் திட்டம் மீது விவாதம் நடைபெற்றது. விவாதத்தின் பின்னர் பாதீடு வாக்களிப்புக்கு விடப்பட்டது. பாதீட்டினை 23 உறுப்பினர்களும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர். அதனையடுத்து பாதீடு நிறைவேற்றப்பட்டது.

28 உறுப்பினர்களைக் கொண்ட சபையில் 23 உறுப்பினர்கள் மாத்திரம் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-6-104)

# பளை பொலிஸ் பிரிவில் இரு ஆலயங்களில் திருட்டு



(கண்டாவளை)

கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புலோப்பளை பகுதியில் அமைந்துள்ள வைரவர் ஆலயம் உடைக்கப்பட்டு அங்கு இருக்கின்ற விக்கிரகங்களின் ஐம்பொன் தகடுகள், விக்கிரகங்கள் களவாடப்பட்டுள்ளன.

அதேபோல தம்பகாமம் பகுதியில் உள்ள நெல்லியாய் அம்மன் ஆலயத்தின் கதவுகள் உடைக்கப்பட்டு அங்கிருந்தும் பெருமளவான பொருட்கள் களவாடப்பட்டிருக்கின்றன குறித்த சம்பவங்கள் தொடர்பில் பளை பொலிஸ் நிலைய த்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் பளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-6-315-100-316)

# முட்கொம்பன் பேருந்து சேவையை மீண்டும் ஆரம்பியுங்கள்

## அப்பகுதி மக்கள் கோரிக்கை

(முறிகண்டி)

2 வாரமாக தடைப்பட்டுள்ள பேருந்து சேவையை தொடருமாறு முட்கொம்பன் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று கிளிநொச்சி அரச பேருந்து சாலைக்கு சென்ற மக்கள் சிலர், சாலை அதிகாரிகளுடன் குறித்த விடயத்தினை வலியுறுத்தியுள்ளனர். கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட முட்கொம்பன் பகுதியில் அரச பேருந்து சேவை முன்னெடுக்கப்பட்டு வந்தது. குறித்த சேவை கடந்த 2 வாரமாக முன்னெடுக்கப்படாமையால் மக்கள் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.


இந்த நிலை தொடர்பில் சாலை அதிகாரிகளுடன் கலந்துரையாடினர். ஆயினும், ஆளணி உள்ளிட்ட பிரச்சினைகள் காணப்படுவதாகவும் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அமைப்புக்கள் ஊடாக உயர் மட்டங்களிற்கு தெரியப்படுத்துமாறு சாலை ஊழியர்கள் தெரிவித்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே மிகத் தொலைவில் உள்ள குறித்த மக்களின் போக்குவரத்து பிரச்சினைக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தீர்வு பெற்றுக் கொடுக்க வேண்டும் எனவும் மக்கள் தெரிவித்தனர். (4-6-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 110

# நட்பின் தவறான புரிதல்



நகர்ப்புறத்தில் வசிக்கும் நண்பன் ஒருவர் தனது வேலையின் நிமித்தம் காரணமாக கிராமத்தில் வசிக்கும் நண்பனுக்கு தொலைபேசியில் அழைப்பெடுத்து தான் குடும்பத்தோடு வருவதாக சொன்னான்.

அதற்கு அந்த நண்பர் "மகிழ்ச்சி வாருங்கள், ஆனால் எனக்கு ஒரு உதவி செய்யுங்கள், உங்கள் ஊரில் இருக்கிற உயர்தரமான விலைகூடிய கேக் வாங்கி வாருங்கள்" என்றார்.

"எதற்காக" என்று இந்த நண்பர் கேட்க, "என் மகன் தேர்வில் வெற்றி பெற்றிருக்கின்றான்,அவனை மகிழ்ச்சியில் ஆழ்த்தும் விதமாக கேக்கினை கொடுத்து கொண்டாட விரும்புகிறேன்.

என்னால் இப்பொழுது வெளியே செல்ல முடியாது. ஆகையால் நீங்கள் ஊரிலிருந்து வாங்கி வாருங்கள்" என்றார். அவர் கூறியவாறு அந்த நண்பர் கொஞ்சம் அதிகமாகவே செலவழித்து நல்ல "கேக்" ஒன்றை வாங்கிச் சென்றார்.

அந்தக் கொண்டாட்டம் முடிந்ததும் ஊருக்குக் கிளம்பத் தயாரான நிலையில் விலை கொடுத்து வாங்கிய கேக்குக்கான தொகையை நண்பன் கொடுப்பான் என்று எதிர்பார்த்தார்.

ஆனால், ஒரு அட்டைப் பெட்டியைக் கொடுத்து "கொஞ்சம் பெரியதாக வாங்கி வந்து விட்டீர்கள், மீதமுள்ள "கேக்"கை உங்கள் குழந்தைக்குக் கொடுங்கள்" என்று ஒரு பெட்டியை கொடுத்தார்.

எவ்வளவு தொகை என்று கேட்டு பணத்தைக் கொடுப்பான் என்று எதிர்பார்த்தால் மீதத்தை நம் தலையில் கட்டிவிட்டானே என்று ஊருக்குத் திரும்பும் வழியில், மனைவியிடம் தன் நண்பனை புலம்பிக் கொண்டு வந்தார்.

"விடுங்கள், அவர் ஒருவேளை மறந்திருக்கலாம் அல்லது நாளை மறுநாள் அனுப்பிவிடலாம் என்று நினைத்திருக்கலாம்" என்றார் மனைவி.

வீட்டிற்கு வந்து அந்த அட்டைப் பெட்டியை திறந்து பார்த்தபோது அதில் "கேக்"குடன் பணமும், ஒரு கடிதமும் இருந்தது.

அந்தக் கடிதத்தில் "நண்பா, என்னுடைய பேச்சை மதித்து நீ என் மகனுக்காக "கேக்" வாங்கி வந்தாய். தொகை எவ்வளவு என்று கேட்டு, அதைத் திரும்பக் கொடுத்து உன்னை தர்மசங்கடத்தில் ஆழ்த்த விரும்பவில்லை. நீ வாங்க மாட்டாய் என்று எனக்குத் தெரியும். எனவே, இந்த பெட்டியில் வைத்து அனுப்பி வைக்கிறேன். தயவு செய்து இதை எடுத்துக் கொள்" என்றிருந்தது.

அதைப் படித்தவுடன், அவனைப் பற்றி எவ்வளவு தவறாக நினைத்துவிட்டோம். ஆனால் அவன் நம்மைப் பற்றி எவ்வளவு உயர்வாகக் கருதுகிறான் என்று வேதனையடைந்தார்.

மனம் வேதனைப்பட்ட அவர், உடனடியாக தொலைபேசியில் தொடர்பு கொண்டு "உன்னைத் தவறாக புரிந்து கொண்டதற்காக என்னை மன்னித்து விடு" என மன்னிப்பு கேட்கப் போகிறேன் என்று மனைவியிடம் சொன்னார்.

அவ்வாறெல்லாம் பேசி இன்னொரு தவறை செய்யாதீர்கள். உங்களைப் பற்றி அவர் உயர்வாக நினைத்திருக்க, "அவரைப் பற்றி தவறாக நினைத்து விட்டேன்" என்று இப்பொழுது சொன்னால் அவர் வேதனைப்படுவார்.

உங்களின் மீதுள்ள மதிப்பு குறைந்து விடும் என்றார் மனைவி. தெளிவான ஆதாரங்கள் கிடைக்காத போது ஒருவரை குறைகூறுவது குற்றமாகும். அவர் தவறே செய்திருந்தாலும் அதற்கு... ஏதோ ஒரு நிர்ப்பந்தம் அல்லது ஏதோ ஒரு காரணம் இருக்கலாம் என நாம் நினைப்பதால் நமக்கு இழப்பேதும் இல்லை. ஆனால் தவறு செய்யாத ஒருவரை நாம் யூகத்தின் அடிப்படையில் குற்றவாளி ஆக்கி மற்றவர்களிடம் பரப்பினால் நாம் குற்றவாளி ஆகிவிடுவோம்.



LAKUL (K) RUGUL

# பல்கலைக்கழகத்திற்கு தெரிவான 9 ஆம் தர மாணவன்

(கொழும்பு)

2021 க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவர்களுக்கான பல்கலைக்கழக வெட்டுப்புள்ளிகள் அண்மையில் வெளியானது.

இதன்படி 14 வயது மாணவர் ஒருவர் பல்கலைக்கழக அனுமதியை பெற்றுள்ளார்.

மாவரமண்டிய கடவட நானமல் கல்லூரியில் கல்வி கற்கும் 14 வயதுடைய தேவும் சனஹாஸ் ரண்சிங்க என்ற மாணவனே இவ்வாறு பல்கலைக்கழக அனுமதியை பெற்றுள்ளார்.

குறித்த மாணவன் வணிகவியல் பிரிவில் பல்கலைக்கழக அனுமதியை பெற்றுள்ளார்.

இவர் 8 ஆம் வகுப்பில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எழுதி, 6 மாதங்களுக்கு பின், 9 ஆம் வகுப்பில் க.பொ.த. உயர்தர வணிகவியல் பிரிவில் பரீட்சைக்கு தோற்றியுள்ளார்.

இதற்கமைய உயர்தர பிரிவில் இவர் மூன்று B சித்திகளை பெற்றுள்ளார்.

இதன்படி அவர் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் நுழைவதற்குத் தகுதி பெற்றுள்ளார். (நி)



# சர்வதேச பல்கலைக்கழகங்களை நிறுவுவது தொடர்பில் விசேட குழு நியமனம்

(கொழும்பு)

பாராளுமன்றத்திலுள்ள முன்னாள் கல்வி அமைச்சர்கள், உயர் கல்வி அமைச்சர்கள் மற்றும் கட்சி தலைவர்களை உள்ளடக்கிய குழுவொன்றை நியமித்து, அக்குழுவின் ஊடாக, சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களை இலங்கையில் நிறுவுவது தொடர்பில் அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கல்வி அமைச்சருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றபோது அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெளிவுபடுத்துகையில்,

நாட்டில் தற்போது பாரிய அந்நியச் செலாவணி பற்றாக்குறை நிலவுகின்ற இந்த சந்தர்ப்பத்தில் இந்தியா, பங்களாதேஷ், நேபாளம், ரஷ்யா, பெலாரஸ், இங்கிலாந்து, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளுக்கு கல்விக்காக வருடாந்தம் சுமார் 30,000 மாணவர்கள் செல்கின்றனர்.

எனவே தான் சர்வதேச மட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட உயர் பல்கலைக்கழகங்களை உள்நாட்டில் நிறுவுவது தொடர்பில் அவதானம் செலுத்துமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

இவ்வாறு சர்வதேச பல்கலைக்கழங்களை நிறுவுவதால், நாட்டிலிருந்து அனுப்பப்படும் டொலர் தொகை எஞ்சும் அதேவேளை, இலங்கை மாணவர்கள் மாத்திரமின்றி வெளிநாடுகளிலுள்ள மாணவர்களும் கல்விக்காக இங்கு வருகை தரக்கூடிய வாய்ப்புக்களும் ஏற்படும்.

இதன் ஊடாக எமக்கு டொலர் வருமானம் கிடைக்கப்பெறும் என அவர் தெரிவித்தார். (நி)



யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்ப நிறுவனத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவு தினம் யாழ்.மத்திய கல்லூரியின் தந்தை செல்வா கலையரங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

(படம்:-கஜிந்தன்)

# இலங்கைக்கு உதவும் முயற்சியில் நிதி நிறுவனங்களை இணையுமாறு சீனா அழைப்பு



(கொழும்பு)

தற்போதைய நெருக்கடியை சமாளிக்க இலங்கைக்கு உதவுவதில் சாதகமான பங்கை ஆற்றுவதற்கு, தொடர்புடைய நாடுகளும் சர்வதேச நிதி நிறுவனங்களும் தம்முடன் இணைந்து செயற்படும் என சீனா நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கான கடன் மறுசீரமைப்பு தொடர்பான விரைவான முன்னேற்றம் குறித்து ஆலோசிப்பதற்காக, சர்வதேச நாணய நிதியத்தின் குழுவொன்று இந்த வாரம் சீனாவுக்குச் செல்லவுள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இது தொடர்பில் கருத்து கேட்ட போதே சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மாவோ நிங் இவ்விடயத்தை தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் பிற சர்வதேச நிதி நிறுவனங்களுடன் சீனா நீண்டகாலமாக நல்ல ஒத்துழைப்புடன் செயற்படுகிறது.

இலங்கையின் கடன் பிரச்சினை தொடர்பில், இலங்கையின் நெருக்கடி மற்றும் சவால்களுக்கு சீனா அதிக முக்கியத்துவம் கொடுப்பதாக மாவோ தெரிவித்தார்.

இலங்கையுடன் தொடர்புடைய நாடுகளும் சர்வதேச நிதி நிறுவனங்களும் சீனாவுடன் இணைந்து செயற்படும்போதே, இலங்கையின் தற்போதைய நெருக்கடிகளை சமாளிப்பதற்கும் அதன் கடன் சுமையைக் குறைப்பதற்கும் நிலையான அபிவிருத்தியை அடைவதற்கும் ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கமுடியும் என்று தாம் நம்புவதாக அவர் மேலும் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 45





“சரி அப்படிக் கல்யாணம் செய்து கொள்வது என்று புறப்பட்டால் அநாதையான சோழ நாட்டு வீரன் ஒருவனையே நான் மணந்து கொள்வேன். அத்தகையவனுக்கு ராஜ்யம் இராது. என்னை அழைத்துக் கொண்டு வேறு ஒரு தேசத்துக்குப் போக வேண்டும் என்று சொல்லமாட்டான். இங்கேயே சோழ நாட்டிலேயே இருந்து விடுவான்”

“அக்கா! அப்படியானால் இந்தச் சோழ நாட்டை விட்டுப் போகமாட்டீர்களே?”

“ஒரு நாளும் போக மாட்டேன் சொர்க்க லோகத்துக்கு என்னை அரசியாக்குவதாகச் சொன்னாலும் போகமாட்டேன்.”

“இன்றைக்குத்தான் என் மனம் நிம்மதி அடைந்தது.”

“நீங்கள்வேறு நாட்டுக்குப்போனால், நானும் உங்களோடு வந்தே தீர வேண்டும். உங்களை விட்டுப் பிரிந்திருக்க என்னால் முடியாது. அதே சமயத்தில் இந்தச் சோழ வளநாட்டைப் பிரிந்து போகவும் எனக்கு மனமில்லை.”

“கல்யாணம் ஆனால் நீ பிரிந்து போய்த்தானே தீர வேண்டும்?”

“நான் கல்யாணமே செய்து கொள்ளப் போவதில்லை, அக்கா!”

“அடியே! எனக்கு செய்த உபதேசமெல்லாம் எங்கே போயிற்று?”

“தங்களை போலவா நான்?”

“அடி கள்ளி! எனக்கு எல்லாம் தெரியும். என் கண்ணில் மண்ணைத் தூவலாம் என்றா பார்க்கிறாய்? உனக்குச் சோழ நாட்டின் மீது அபிமானம் ஒன்றும் கிடையாது. நீ ஆசை வைத்திருக்கும் சோழ நாடு. வாளும் வேலும் தாங்கி ஈழநாட்டுக்கு யுத்தம் செய்ய அல்லவா போயிருக்கிறது? உன் அந்த ரங்கம் எனக்குத் தெரியாது என்றா நினைத்தாய்?”

“அக்கா! அக்கா! நான் அவ்வளவு மடமதி உடையவளா? சூரியன் எங்கே? காலைப் பனித்துளி எங்கே? சூரியனுடைய நட்புக்குப் பனித்துளி ஆசைப்பட்டால் என்ன பயன்?”

“பனித்துளி சிறியது தான்! சூரியன் பெரியது. பிரகாசமானது தான்! ஆனாலும் பனித்துளி அப்படிப்பட்ட சூரியனைச் சிறைப்படுத்தித் தனக்குள் வைத்திருக்கிறதோ, இல்லையோ?”

வானதி உற்சாகமும் ஆர்வமும் நிறைந்த குரலில், “அப்படியா சொல்கிறீர்கள்! பனித்துளி கூடச் சூரியனை அடையலாம் என்று சொல்கிறீர்களா?” என்றாள். பிறகு திடீரென்று மனச் சோர்வு வந்து விட்டது. “பனித்துளி ஆசைப்படுகிறது; சூரியனையும் சிறைப்பிடிக்கிறது. ஆனால் பலன் என்ன? சிறிது நேரத்துக்கெல்லாம் சரியான தண்டனை அடைகிறது. வெயிலில் உலர்ந்து, இருந்த இடம் தெரியாமல் மறைகிறது!”

“அது தவறு, வானதி! பனித்துளியின் ஆசையைக் கண்டு சூரியன் தன்னுடன் பனித்துளியை ஐக்கியப் படுத்திக் கொள்கிறான். தன் ஆசைக்குகந்த பனித்துளிப் பெண் பிற புருஷர் கண்ணில் படக் கூடாது என்று அவன் எண்ணம். இரவு வந்ததும் மறுபடியும் வெளியே விட்டு விடுகிறான். மறைந்த பனித்துளி மறுபடியும் வந்து உதிக்கிறது அல்லவா?”

“அக்கா! இதெல்லாம் என்னைத் தேற்றுவதற்காகச் சொல்கிறீர்கள்.”

“அப்படியானால் உன் மனதில் ஒரு குறை இருக்கிறது என்று சொல்லு. இத்தனை நாள் ‘இல்லவே இல்லை’ என்று சாதித்தாயே? அதனால் தான் குடந்தை சோதிடரிடம் போகிறேன்.”

“என் மனதில் குறையிருந்தால், அதைப் பற்றிக் கேட்கச் சோதிடரிடம் போய் என்ன பயன்?” என்று கூறி வானதி பெருமூச்செறிந்தாள்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா



## அளவில்லையே!

ஒரு நாட்டில் ஒரு ஏழை மனிதன் இருந்தான். அவன் ஊர் ஊராகப் போய் பிச்சை கேட்டு வாங்கி உண்டு காலம் கழித்து வந்தான். அறுவை நாட்களில் அவனுக்கு வயிறு நிறைய உணவோ அரிசியோ கிடைக்கும். அதற்குப் பின் எதுவும் கிடைக்காது. பல நாட்கள் பட்டினியே கிடக்க வேண்டி வரும்.

ஒரு ஆண்டில் அவனுக்கு இதே நிலை ஏற்பட்டது. மூன்று நாட்களாக ஒரு ஊரில் உண்ண எதுவும் கிடைக்காது போகவே அவன் அடுத்த ஊருக்குப் போகலானான். வழியில் அவனை ஒரு கிழவன் பார்த்து “பாவம் பசியாக இருக்கிறாயா? இந்த ஒரு வேர்க்கடலை” என்று கூறி ஒரு வேர்க்கடலையை அவன் கையில் வைத்தான்.

அந்த ஏழையோ “என் பசிக்கு இந்த வேர்க்கடலை எந்த மூலைக்கு?” எனவே அந்தக் கிழவனும் “இதை நீ சாப்பிட்டு விடாதே இது உன்னிடத்தில் இருக்கும் வரை உன்னை எல்லோரும் வரவேற்று உணவு அளிப்பார்கள். எனவே நீ பட்டினி கிடக்க வேண்டிய அவசியமே இராது” என்று கூறிவிட்டுப் போனான்.

அந்த ஏழை அந்தக் கிழவன் கூறியதை நம்பவில்லை. ஒரு வேர்க்கலைக்கு அபூர்வ சக்தி இருக்கிறது என்று யாராவது கூறினால் அவன் பைத்தியக்காரனாகத்தான் இருப்பான் என்று அவன் நினைத்தான். ஆனாலும் அதை எடுத்துக் கொண்டு சென்றான்.

அந்த ஏழை அந்த வேர்க்கடலையை எடுத்துக் கொண்டு அடுத்த ஊரை அடைந்த போது இரவாகி விட்டது. அவன் ஒரு வீட்டின் முன் நின்று “ஐயா! சாப்பாடு இருந்தால் கொடுங்கள்” என்று கூவினான்.

அந்த வீட்டுக்காரனும் வெளியே வந்து உணவு கேட்டவன் உள்ளூர்ப் யாசகனல்ல என்று கண்டு “ஓ! வெளியூர்க்காரரானா! வா உள்ளே” என்று கூறி வீட்டினுள் அவனை அழைத்துச் சென்றான்.

அந்த வீட்டுக்காரன் அந்த ஏழையை உட்கார வைத்து உபசரித்து உணவு படைத்ததோடு “இரவு வெகு நேரமாகிவிட்டது. நீங்களோ அயலூரரார். வேறு எங்கே போக முடியும், இங்கேயே படுத்துக் தூங்கி விட்டு காலையில் செல்லுங்கள்” என்று கூறி அவனுக்குப் படுக்க வசதி செய்து கொடுத்தான்.

அந்த ஏழையின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. அதுவரை யாருமே அவனை அழைத்து உபசரித்து உணவளித்து படுக்க வசதியும் செய்து கொடுத்தது இல்லை. அவன் தன்னிடமுள்ள வேர்க்கடலையின் மகிமையால்தான் இவ்வளவும் நடக்கிறது என்று எண்ணி மகிழ்ந்தான். கிழவன் கூறியது உண்மை தான் என்பது அவனுக்கு தெரிந்து போயிற்று. எனவே சக்தி வாய்ந்த அதைத் தன் தலைக்குப் பக்கத்தில் வைத்துக் கொண்டு சுகமாகத் தூங்கினான்.

காலையில் அந்த ஏழை படுத்திருந்த இடத்திற்கு அவ் வீட்டுக் கோழி வந்தது. அவனருகே இருந்த வேர்க்கடலையை எடுத்து விழுங்கி விட்டது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டிலுள்ள அறிஞர்களின் உள்ளங்களை நமக்கு எடுத்துக்காட்டும் கண்ணாடிகளே புத்தகம். - டேவர்ட் கிப்ரான்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தெருவில் குப்பை போடுவதை தடுக்கவே முடியாதா?

பாடசாலைகளில் சமயக் கல்வி போதிக்கப்படுகின்ற ஒரே நாடு இலங்கை என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

பொதுவில் உலக நாடுகளில் பண்பாடு, விழுமியம், கலாசாரம் சார்ந்த பாடங்கள் போதிக்கப்பட்டாலும் சமயத்தைப் பாடமாகப் போதிக்கின்ற மிகப்பெரும் சிறப்பு இந்த நாட்டுக்கு மட்டுமே உண்டு.

ஆம், தரம் ஒன்று தொடக்கம் தரம் 11 வரை சமய பாடம் பொதுக் கல்வியாக ஆக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவரவர் சார்ந்த சமயத்தை பாடசாலை வகுப்பறையில் கற்கின்ற ஏற்பாட்டைச் செய்தவர்களின் உயர்ந்த சிந்தனை இங்கு நோக்குதற்குரியது.

அதாவது இறைவழிபாடு, இறை நம்பிக்கை, பாவபுண்ணியம் என்ற அறம் சார் சிந்தனைகளை மாணவர்களிடையே ஏற்படுத்துவதன் மூலம் அன்பும் அறமும் ஆன்மிகமும் நிறைந்த மக்கள் சமூகத்தை உருவாக்க முடியும்.

தவிர, நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலுக்கும் எதிர்வினை இருக்கும் என்ற உண்மையை ஆழ் மனதில் பதியவைப்பதன் மூலம் பாவகாரியங்களைச் செய்யக்கூடாது என்ற உயர்ந்த எண்ணம் ஏற்படுத்தப்படும்.

இதையும் கடந்து பிறர் சொத்துக்கு ஆசைப்படாமல் வாழுதல், நேர்மை, நீதி, நியாயம் என்ற அறங்களை வாழ்க்கையில் பின்பற்றுதல், பிறர் மீது அன்பு செலுத்துதல், மற்றவர்களுக்குக் கெடுதி செய்யாமல் மற்றவர்களைத் துன்புறுத்தாமல் வாழுதல்.

முடிந் தளவு உதவிகள் புரிந்து யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற சமநிலைத் தர்மத்தை ஏற்படுத்துதல் என்ற உயரிய நோக்குடன் சமய பாடம் பாடசாலைகளில் போதிக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இருந்தும் யதார்த்தத்தில் சமய பாடம் தோல்வியில் முடிந்துவிட்டதோ என்று எண்ணுமளவில் நிலைமை உள்ளது.

ஆம், தரம் ஒன்று தொடக்கம் தரம் 11 வரை சமய பாடத்தைக் கற்று இறை நம்பிக்கையுடன் நேர்மையாக வாழுதல் என்ற கருத்துக்கள் உள்வாங்கப்பட்ட பின்னர்; நாம் எப்படி நடந்து கொள்கின்றோம் என்பதைப் பார்க்கும்போதுதான் இதயம் வெந்து எரிகிறது.

உண்மை. இன்றைய எங்களின் வாழ்க்கை சுயநலத்தின் உச்சத்தை எட்டிவிட்டது.

நான் வாழ்ந்தால் போதும் என்ற கீழ்த்தரமான மனநிலையின் உச்சமே தங்கள் வீட்டுக் குப்பைகளை - கழிவுகளை தெருக்களிலும் மற்றவர்களின் வீடுகளுக்கு அருகிலும் போட்டு விடுகின்ற செயலாகும். அந்தோ! கொடுமையிலும் கொடுமை..

நினைக்கவே மனம் திணுக்குறும் அளவில் வீட்டுக்குப்பைகளை - பம்பஸ் கழிவுகளை வீதியில் கொண்டு வந்து போடுகின்ற இந்த ஈனச்செயலுக்கு மன்னிப்பு ஏது?

குப்பைகூழங்களை மிகப்பக்குவமாக அகற்றக்கூடிய வசதி வாய்ப்புக்கள் இருந்தும் அதனைச் செய்யாமல், தங்கள் வீட்டுக் கழிவுகளை வீதிகளில் கொட்டிவிட, அவற்றைத் தெருநாய்கள் இழுத்துக் கொட்டிப்பரவிவிட, அந்த இடம் முழுவதும் துர்நாற்றம் வீசுவதாக மாறிவிடுகிறது.

இங்குதான் சமய பாடம் வெறும் பரீட்சைப் பெறுபேறுக்கானதென்ற உண்மை உரைப்படுகிறது.

என்ன செய்வது பாவத்தை உழைக்கின்றோம் என்று நினையாத இப்பாதகரை திருத்த முடியவில்லையே என்ற வேதனை மட்டுமே மிச்சமாய் உள்ளது.

# அதிகாரப் பகிர்வை இனவாதிகளே வலியுறுத்தும் சூழல் உருவாக வேண்டும்

## சபையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

அதிகாரப் பகிர்வினை மேற்கொள்ளுமாறு இனவாதிகளும் சொல்வதற்குரிய சூழலை ஏற்படுத்த வேண்டுமே தவிர, இனவாத சக்திகளுக்கு மெல்வதற்கு அவலை கொடுக்க கூடாது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கடற்றொழில் அமைச்சு தொடர்பான வரவு செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். குறித்த விவாதத்தில், கடற்றொழில் அமைச்சின் செயற்பாடுகள், கடந்த கால அடைவுகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக தெளிவுபடுத்திய கடற்றொழில் அமைச்சர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

ஜனாதிபதி அவர்கள், தமிழ் மக்களின் பிரதிநிதிகளுக்கு விடுத்திருக்கின்ற அழைப்பினை ஏற்று அதனை எமது மக்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்வதற்கு தமிழ் அரசியல் தரப்பினர் முன்வர வேண்டும்.

எம்மைப் பொறுத்தவரையில், தற்போது இந்த நாட்டின் அரசியல் யாப்பில் நடைமுறையில் இருக்கின்ற எமது அரசியல் யாப்பின் 13 ஆவது திருத்தத்தினை பலப்படுத்தி அதனை முன்னெடுப்பதையே எமது மக்களின் அரசியல் ரீதியான பிரச்சினைக்கு ஓர் ஆரம்பத் தீர்வாகக் கருதுகிறோம்.

இல்லாததைப் பற்றிக் கதைத்து இருப்பதையும் கைவிட்டு விடக்கூடாது என்பதை நாம் வலியுறுத்துகிறோம்.

தமிழ் மக்களது பிரச்சினை தொடர்பில், கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதையாக இப்போதே சில நாடகங்கள் அரசியல் அரங்கில் மேடையேற்றப்பட்டு வருவதையும் அவதானிக்க முடிகின்றது என்று சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## 2 இந்திய இழுவை படகுகள் கடற்படையால் கைப்பற்றப்பட்டன

(கொழும்பு)

எட்டு இந்தியர்களும் இரண்டு மீன்பிடி இழுவை படகுகளும் இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இரண்டு மீன்பிடி இழுவை படகுகளும் 4,000 கிலோவுக்கும் அதிகமான கெண்டு இலைகளை ஏற்றிச் சென்றன.

மேற்கு கடற்படை கட்டளைக்கு உட்பட்ட SLNS சுரனிமிலா, குதிரை மலை முனையில் மேற்கொள்ளப்பட்ட ரோந்து நடவடிக்கையின் போது, இலங்கை கடற்பரப்பில் இரண்டு இந்திய மீன்பிடி இழுவை படகுகளை இடைமறித்துள்ளது.

மீன்பிடி இழ்வை படகுகளில் 128 பொதிகளில் 4,000 கிலோ எடையுள்ள கெண்டு இலைகள் நிரப்பப்பட்டிருந்தன.

கைப்பற்றப்பட்ட இழுவை படகுகள், கெண்டு இலைகள் மற்றும் எட்டு இந்தியர்களும் கரைக்கு கொண்டு வரப்பட்டு மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக உரிய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

2022 ஆம் ஆண்டில் இதுவரை 15,000 கிலோ கிராம் கெண்டு இலைகள் கடலில் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற் படை தெரிவித்துள்ளது. (ம-7)

## மக்கள் கஷ்டப்படும் போது கேக் சாப்பிட முடியாது

### பசில் ராஜபக்ஷ

மக்கள் கஷ்டப்படும் நேரத்தில் என்னால் கேக் சாப்பிட முடியாது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஊடக மையத்தின் நான்காம் ஆண்டு நிறைவு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட போதே ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் இந்த கருத்துக்களை வெளியிட்டார்.

பத்தரமுல்ல நெலும் மாவத்தையில் அமைந்துள்ள பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற வைபவத்தில் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் எவரும் சுதந்திரமாக அரசியல் செய்யக்கூடிய சூழல் உருவாகியுள்ளதாகவும் பசில் ராஜபக்ச தெரிவித்தார்.

மக்களின் எதிர்பார்ப்புகளை 100 வீதம் நிறைவேற்ற முடியாமல் போனமை தொடர்பில் வருந்துவதாகவும், குறைபாடுகளை நிவர்த்தி செய்து மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற பாடுபடுவேன் எனவும் பசில் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ். பிரதேசத்தில்** அம்பன், அம்பன் மருத்வ மனை, மணற்காடு, குடத்தனை, குடத்தனை நீர் வழங்கல், நடுக் குடத்தனை, பொற்பதி, வளிகண்டி ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## யாழ். இந்திய துணை தூதரகத்தின் ஏற்பாட்டில் மகாகவி பாரதியார் விழா

யாழ். இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 140 ஆவது பிறந்ததின நிகழ்வு 11 டிசம்பர் 2022 ஞாயிற்றுக் கிழமை அன்று மாலை 4.30 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற உள்ளது.

இந்த நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் பாரதி நம் நெஞ்சில் ஆழப் பதிவது பக்திக் கவிதைகளாலா? சமூகக் கவிதைகளாலா?" என்ற சிறப்புப் பட்டிமன்றம் நடைபெற உள்ளது. அணிசெய்பேச்சாளர்களாகப் பேராசிரியர் ஸ்ரீபிரசாந்தன், இ.வாசுதேவா, ந.விஜயசுந்தரம், செந்தமிழ் சொல்லருவி க.லலீசன் ஆகியோர் பங்குபற்றி தமது வாதங்களை முன்வைப்பார்கள்.

நிகழ்வின் தொடக்கமாக நீர்வேலி பொன்சக்தி கலாகேந்திரா மாணவர்களின் பாரதி பாடல் நடனமும் இடம்பெறவுள்ளது.

ஆர்வலர்கள் அனைவரையும் நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு இந்தியத் துணைத்தூதரகம் கேட்டுள்ளது. (ம-7)

## சீனாவுடனான கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தை துரிதப்படுத்தப்படும்

### ஜனாதிபதி ரணில்

சீனாவுடனான கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தை தாமதமானதற்கு சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாடு நடைபெற்றமையே காரணம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். மாநாடு நிறைவடைந்துள்ளதால், பேச்சுவார்த்தைகள் துரிதப்படுத்தப்படும் எனவும் ஜனாதிபதி கூறினார்.

அடுத்த வருடம் சீனாவுடனான கடனை மறுசீரமைக்க எதிர்பார்த்துள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி, இலங்கையுடனான கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சீனாவிற்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தெரிவித்தார்.

இதன் பிரகாரம், அடுத்த வருடம் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து ஊழியர் மட்ட கடன் தொகையை பெற்றுக்கொள்ள முடியும் என ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டார். நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற 2022 ஆம் ஆண்டிற்கான இலங்கை பொருளாதார மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனை கூறினார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைக்க முக்தி தரும் திருவண்ணாமலை கார்த்திகை தீபம்

திருவண்ணாமலையை பூமியின் இதயம் என்பார்கள். இதன் மேன்மை விபரிக்க முடியாத ஒன்று. 'அண்ணாமலையானாக அமர்ந்திருக்கும் அருணாசலேஸ்வரர் பரிபக்குவம் அடைந்த ஆத்மாக்கள் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் அவர்களிற்கு தன்னை நினைவூட்டத் தவறுவதில்லை. அந்த ஆத்மாக்களை தன்வசம் ஈர்த்து சாதனையில் ஈடுபடக்கூடிய சூட்சும அழைப்பு விடுக்கிறான் கிரிவலம் செய்கின்ற எவர்க்கும் முன்னை வினையும் இம்மை வினையும் இல்லை என்கின்றான்.

திருவண்ணாமலையில் மலையே சிவனாக மலர்ந்ததால் கிரிவலம் செய்தால்தான் வழிபாடு முற்றுப் பெற்றதாக அமையும். இதையே ரமண மகரிஷி தம் வாக்கில் "ஒரு முறை கிரிவலம் செய்து பார். அதன் பயனை அறிவாய்" என்று கூறி யிருக்கி றார். ரமண மகரிஷி கிரிவலம் செல்கையில் சிவன ருளையே நினைத்துப் பாடிச் சென்றது தான் அருணாசல அட்சர மாலை; திருக்குறள் போன்று இரண்டு இரண்டு அடிகளாக 108 பாடல்கள் இருக் கும். பாடலை தொடங்கும்போதும் சரி ஒவ்வொரு பாடலை முடிக்கும் போதும் சரி அருணா சல சிவ, அருணாசல சிவ, அரு ணாசல சிவ, அருணாசல சிவ, அருணா சல சிவ என்று பாட வேண்டும். இப்படிச் சொல்வதால் வேறு எங்கும் சிந்தனை செல்லாமல் இறைவன் மீதே மனம் நிலைத்திருக்கும். அவ்விதம் செய்யும் கிரிவலத்திற்கு ஈடு இணையே இல்லை.

அந்த வகையில் நாம் இதன் சிறப்பை திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர், அருணகிரிநாதர் ஆகியோர் பாடி சிறப்பித்த மலை



திருவண்ணாமலை.

அண்ணாமலையை தரிசித்து கிரிவலம் வந்தவர்க்கும் தொழுதவர்க்கும் அவரது 21 தலைமுறைக்கும் மோட்சம் கிடைக்குமாம். ஜனன மரணத்துடன் திகழும் இந்தப் பிறவிக்கு இந்த மலை மருந்து போல் இருப்பதால் இதனை மலை மருந்து என்றும் கூறுகிறார்கள். இதனை ரமண மகரிஷியும் மலை மருந்தாய் ஒளிர் அருணாச்சலா எனக் குறிப்பிடுகின்றார்.

அண்ணாமலையை ஞாயிற்றுக்கிழமைகளில் சுற்றினால் சிவபதவி பெறலாம். திங்கட்கிழமைகளில் சுற்றினால் இந்திரப் பதவி கிடைக்கும். செவ்வாய்க்கிழமைகளில் சுற்றினால் கடன், வறுமை நீங்குவதோடு தொடர்ந்து வரும் ஏழு பிறப்புகளையும் நீக்கி சுபீட்சம் பெறலாம். புதன்கிழமைகளில் சுற்றினால் கலைகளில் தேர்ச்சியும் முத்தியும் கிடைக்கும். வியாழக்கிழமைகளில் சுற்றினால் ஞானிகளிற்கு ஒப்பான நிலையை அடைவார்கள். வெள்ளிக்கிழமைகளில் சுற்றினால் விஷ்ணு பதத்தை அடையலாம். சனிக்கிழமைகளில் சுற்றினால் நவக்கிரகங்களை சுற்றி வழிபட்ட பலன். அமாவாசை அன்று சுற்றினால் மனதில் உள்ள கவலைகள் போகும் மனம் நிம்மதி அடையும்.

ஊழ்வினைகளை நீக்கக் கூடியது அண்ணாமலையான் கோயில். பிறவிப் பிணி நீங்க விரும்புபவர்கள் மலை வலம் வருவதாலேயே தத்தம் முன் வினைப் பயனை குறைத்துக் கொள்ள முடியும்.

அண்ணாமலையார் உண்ணாமலை அம்மனுடன் உற்சவ வடிவில் தீபத் திருவிழாவிலும் மற்றும் மாட்டுப் பொங்கல் நாளிலும் மலை வலம் வருகிறார். இறைவனே செய்யும் இந்த கிரிவலத்தில் வாழ்வில் ஒருமுறையாவது நாமும் உடன் சென்று வர வேண்டும்.

**வே. சிவகுருநாதன்**
**செயலாளர்,**
**சைவப்பிரகாசப் பேரவை,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

# சிறுநீரகக் கடத்தலில் ஈடுபட்ட சந்தேகநபர் கைது

(கொழும்பு)


சிறுநீரகக் கடத்தலுடன் தொடர்புடைய தரகர் ஒருவர், கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வறுமையான குடும்பங்களுக்கு பணம் பெற்றுத் தருவதாகக் கூறி, முன்னணி மருத்துவமனைக்கு சிறுநீரகங்களை பெற்றுக் கொடுத்ததன் பின்னர் பணம் வழங்காமை தொடர்பில் ஐவரால் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு 15 - கஜீமாவத்தை பகுதியைச் சேர்ந்த 41 வயதான ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுநீரகங்களை பணத்திற்காக வழங்கும் நபர்கள் மற்றும் அவற்றை பெற்றுக் கொள்ளும் தரப்பினர் ஆகியோருக்கு இடையில் சந்தேகநபர் தரகராக செயற்பட்டுள்ளதாகவும் தரகுப் பணத்திற்கு மேலதிகமாக சிறுநீரகத்திற்காக வழங்கப்பட்ட பணத்தில் ஒரு பகுதியை மோசடி செய்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாகவும் தெரிவித்தனர். (நி)



இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் யூரி மேட்டரி பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோனை சந்தித்தார். கொழும்பிலுள்ள அனர்த்த முகாமைத்துவ நிலைய வளாகத்தில் அமைந்துள்ள பாதுகாப்பு இராஜாங்க அமைச்சில் இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

# வசந்த முதலிகே, தேரர் பிணையில் விடுதலை



(கொழும்பு)

அனைத்துப் பல்கலை கழக மாணவர் ஒன்றிய ஏற்பாட்டாளர் வசந்த முதலி கேவுக்கும் அனைத்து பல்கலைகழக பிக்குமார் மாணவர் ஒன்றிய ஏற்பாட்டாளர் கல்வேவ ஸ்ரீதம்ம தேரருக்கும் பிணை வழங்கப்பட்டுள்ளது.

கடுவெல நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை ஆஜர்ப்படுத்தப்பட்ட போதே இவ்வாறு பிணை வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய குறித்த இருவரையும் தலா ஒரு இலட்சம் ரூபாய் சரீர பிணையில் விடுவிக்குமாறு கடுவெல நீதிவான் உத்தர விட்டுள்ளார். எவ்வாறாயி னும் மற்றுமொரு வழக்கு தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனை கிடைக்கும் வரையில் எதிர்வரும் 12 ஆம் திகதிவரை இரு வரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 150 | 150 | 160 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 200 | 200 |
| தக்காளி | 200 | 180 | 240 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 120 | 200 | 150 |
| கோவா | 260 | 200 | 280 | 280 |
| கரட் | 300 | 450 | 400 | 400 |
| பூசணி | 100 | 120 | 100 | 120 |
| புடோல் | 260 | 250 | 150 | 200 |
| வாழைக்காய் | 120 | 110 | 100 | 140 |
| சின்ன வெங்காயம் | 550 | 600 | 700 | 700 |
| பெரிய வெங்காயம் | 220 | 200 | 180 | 250 |
| பாகற்காய் | 500 | 450 | 500 | 600 |
| வெண்டக்காய் | 160 | 120 | 140 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 160 |
| பயற்றங்காய் | 250 | 240 | 250 | 300 |
| லீக்ஸ் | 300 | 380 | 450 | 450 |
| பீற்றூட் | 400 | 400 | 400 | 450 |
| கறிமிளகாய் | 650 | 750 | 700 | 600 |
| முருங்கைக்காய் | 800 | 700 | 650 | 800 |
| போஞ்சி | 200 | 200 | 220 | 200 |
| கத்தரிதம்புள்ள | 180 | 100 | -- | 150 |
| கீரை - 1 பிடி | 180 | 150 | 180 | 250 |
| தேசிக்காய் | 250 | 200 | 160 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 60 | 60-80 |
| இராசவள்ளி | 300 | 300 | 300 | 240 |
| வெங்காயப்பூ | -- | -- | 420 | -- |
| முள்ளங்கி | 200 | 240 | 200 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 50 | 50 | 40 |
| ஈரப்பலா | 100 | 150 | 120 | 140 |

# 60 வயதில் கட்டாய ஓய்வு

## அதிவிசேட வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

அனைத்து அரச ஊழியர்களும் 60 வயதில் கட்டாயம் சேவையிலிருந்து ஓய்வு பெற வேண்டும் என்ற கட்டளை வர்த்தமானியூடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்த்தனவின் கையொப்பத்துடன் இந்த அதிவிசேட வர்த்தமானி நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் அமுலாக்கப்படவுள்ளது.

அரசியலமைப்பினூடாக அல்லது ஏனைய சட்டங்களின் ஊடாக கட்டாய ஓய்விற்கான வயதெல்லை குறிக்கப்பட்டுள்ள ஊழியர்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து அரச ஊழியர்களும் 60 வயதில் கட்டாயம் ஓய்வு பெற வேண்டும் என இந்த அதிவிசேட வர்த்தமானியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாளிக்குள்...

தவ தேவாலயம் ஒன்றுக்கு சென்றிருந்தனர்.

குழந்தை வெளிப்புறத்தில் விளையாடிக் கொண்டிருந்ததாகவும் காலை 9 மணியளவில் குழந்தையைக் காணாது தேடியபோது தேவாலயத்தின் குளியலறைக்குள் இருந்த 20 லீற்றர் வாளிக்குள் மூழ்கிய நிலையில் 10.30 மணியளவில் மீட்கப்பட்டு ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டது.

அங்கு சிகிச்சை பலனின்றி நேற்று செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணியளவில் குழந்தை உயிரிழந்தது. இம் மரணம் தொடர்பில் யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## வாரத்துக்கு...

சென்னையிலிருந்து புறப்படும் விமானம் காலை 10.50 மணிக்கு பலாலி விமான நிலையத்தை வந்தடைவதற்கும் பலாலி விமான நிலையத்திலிருந்து நண்பகல் 11.50 மணிக்கு மீண்டும் சென்னை நோக்கிய விமான பயணத்தை ஆரம்பிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்திலிருந்து இந்தியாவின் சென்னைக்கான விமான சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாக குடிசார் விமான சேவைகள் அதிகார சபை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இந்த விமான சேவைகள் எதிர்வரும் 12ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன. (ம-7)

## ராஜபக்ஷ...

ஆனால், அவர்கள் திருந்தவில்லை. அதனால் தான் அவர்களை மக்கள் கூண்டோடு விரட்டியடித்தார்கள்" என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

நீங்கள் ராஜபக்ஷ குடும்பத்தை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்குப் பாடுபட்டீர்கள். ஆனால், இறுதியில் அவர்களை நீங்கள் வெறுத்தமைக்குக் காரணம் என்ன? அவர்களை மக்கள் விரட்டியடிக்கக் காரணம் என்ன?" என்ற கேள்விக்குப் பதிலளிக்கும் போதே விமல் வீரவன்ஸ இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

மகிந்த ராஜபக்ஷ - கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் இந்த நாட்டில் புலிப் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டியவர்கள். அப்படியான தலைவர்களைத் தோல்வியடைந்த தலைவர்களாக வீட்டுக்கு அனுப்பிவைக்க நாம் விரும்பவில்லை. ஆனால், அவர்களின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளால் இறுதியில் எல்லாம் தலைகீழாக மாறின. மகிந்த ராஜபக்ஷ அதிகாரத்தில் இருக்கும்போதே கௌரவமாக ஓய்வுபெற வேண்டும் என்று நாங்கள் விரும்பினோம்.

2015இல்தான் ராஜபக்ஷ குடும்ப ஆட்சி பற்றிப் பரவலாகப் பேசப்பட்டது. அதனால் அந்தக் குடும்பம் தோல்வியடைந்தது. மீண்டும் 2019 இல் ஆட்சிக்கு வந்தபோது அவர்கள் திருந்துவார்கள் என்று நாங்களும் மக்களும் நினைத்தோம்.

அது நடக்கவில்லை. 2015 இற்கு முன் ராஜபக்ஷ குடும்பத்தில் 3 பேர் தான் அமைச்சர்கள். 2019 இல் 5 பேர் அமைச்சர்கள். குடும்ப ஆட்சியில் அக்கறை செலுத்திய ராஜபக்ஷக்கள், நாட்டினதும் மக்களினதும் நலன்களில் எந்தக் கவனமும் செலுத்தவில்லை. முன்னர் (2015 இற்கு முன்) போன்றே செயற்பட்டார்கள். இதனால் சீற்றமடைந்த மக்கள், ராஜபக்ஷக்களைக் கூண்டோடு விரட்டியடித்தார்கள் என தெரிவித்துள்ளார். (ம-7)

## பால் புரைக்கேறி...

மரணமடைந்ததாகும்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்திய சாலையின் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7)

## 5 முக்கிய...

உயர்ஸ்தானிகர் மற்றும் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் இடம்பெற்ற அபிவிருத்தி ஒத்துழைப்புத் தொடர்பில் ஜனாதிபதிக்கும் இராஜதந்திர பிரதிநிதிகளுக்கும் இடையில் கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7)

## அறிமுகம் செய்ய...

கொழும்பில் இடம்பெற்ற 2022ஆம் ஆண்டுக்கான இலங்கை பொருளாதார மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

பழமையான பொருளாதார முறைமையை கையாள்வதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியாது.

எனவே, இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முதன்மையான தேவையாக வெளிநாட்டு அந்நியச் செலாவணியே அவசியம் என்று வலியுறுத்தினார்.

மேலும், இலங்கை தற்போது எதிர்நோக்கி வரும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள வேண்டுமாயின், கடன் மீளச் செலுத்துவதை மறுசீரமைக்க வேண்டும் என்பதுடன், மிகத் திருத்தமான பொருளாதார முறைமையொன்று அறிமுகம் செய்யப்பட வேண்டுமென்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இந்த நிலைமையிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டார். (ம-7)

## குமார...

சுவாமி ஆலயத்தின் திருக்கார்த்திகை உற்சவம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை மாலை மிகவும் பக்திபூர்வமாக இடம்பெற்றது.

கார்த்திகை மாத, கார்த்திகை நட்சத்திரத்துடன் கூடிய குமாராலய தீபத் திருநாளான நேற்றைய தினம் மாலை வசந்த மண்டபப் பூஜை நடை பெற்று வள்ளி, தேவ சேனா சமேதராக கைலாச வாகனத்தில் முத்துக் குமார சுவாமி எழுந்தருளி, ஆலய முன்றலில் அமைக்கப்பட்டிருந்த சொக்கப்பனை கொளுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நல்லூர் முருகப் பெருமான் கைலாச வாகனத்தில் வெளி வீதியுலா வந்தார். (ம-7)

## ரணி...

வரை தமக்கு உத்தியோகபூர்வ அழைப்பு விடுக்கப்படவில்லை என தமிழ் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

வரவு செலவுத் திட்டத்திற்கு பின்னர் தமிழ்க் கட்சிகளுடன் பேசுவதற்கு தயார் என வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

எனினும், இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் ஜனாதிபதியிடம் இருந்து தமக்கு இதுவரை எவ்வித உத்தியோகபூர்வ அழைப்பும் வரவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

கலந்துரையாடலுக்கான திகதியை ஜனாதிபதி உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் பட்சத்தில், தங்களுக்குள் கலந்துரையாடி அடுத்த கட்ட செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதி பாராளுமன்றத்தில் பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்திருந்த போதிலும், உத்தியோகபூர்வமாக எவ்வித அழைப்பும் இதுவரை விடுக்கப்படவில்லை என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் குறிப்பிட்டார். (ம-7)

### ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 06/12/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1416
வெற்றி இலக்கங்கள்: கும்பம் 1 9 3 4 6 2
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய
திகதி - 2022.12.06
சீட்டிழுப்பு இலக்கம் - 991
ஆங்கில எழுத்து: J
வெற்றி இலக்கங்கள்: 04 33 37 59

### கொவிசெத
திகதி 2022.12.06
சீட்டிழுப்பு இலக்கம் 3203
ஆங்கில எழுத்து: E
வெற்றி இலக்கங்கள்: 30 39 47 51
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்
திகதி 06/12/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1309
வெற்றி எழுத்து: A, சுப்பர் இலக்கம்: 26
வெற்றி இலக்கங்கள்: 02 07 08 68

### HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.12.06
சீட்டிழுப்பு இலக்கம் 270
வெற்றி இலக்கங்கள்: தனுசு 12 17 23 35 தனுசு
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத
திகதி 2022/12/06
சீட்டிழுப்பு இலக்கம் 4961
ஆங்கில எழுத்து: H
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 3 2 3 3 8 6
தேசிய லொத்தர் சபை

### SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1936
நிறம்: இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022.12.06
தினம்: செவ்வாய்க்கிழமை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,884,540/-
O 06 15 55 75
ரூ.500/- பரிசுக்குரிய: 9862
ரூ.100/- பரிசுக்குரிய: 832

### சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.12.06
சீட்டிழுப்பு இல: 4097
வர்ணம்: இள நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,780,080/-
வெற்றி இலக்கங்கள்: 19 30 34 63
ஆங்கில எழுத்து: U

### சசிரி
சீட்டிழுப்பு வாரம் 258
சீட்டிழுப்பு திகதி 2022.12.06
செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள்: 19 26 39
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,439,800/-

### ராசி
சுப்பர் ஜக்பொட் பரிசு வெல்லப்பட்டுள்ளது ரூ. 2,000,000/-
திகதி 2022-12-06
வெற்றி வாரம் 3648
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள்: 16 44 49 50
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,878,040/-

### லொட்டோ
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Y 14 27 40 65 77
சீட்டிழுப்பு வாரம் 1112
இளஞ்சிவப்பு
திகதி 2022.12.06 செவ்வாய்க்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 283,501,865.80
தொலைபேசி: 011-2 333 546-47
Web: www.dlb.lk

### அத கோடிபதி
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1762
வர்ணம்: இள நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2022.12.06
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,785,740/-
வெற்றி இலக்கங்கள்: 47 67 71 73
ஆங்கில எழுத்து: I

# தந்தை பாவித்த ஐஸ் போதையை விழுங்கிய 2 வயது குழந்தை

## ஆபத்தான நிலையில் யாழ். போதனாவில்

(யாழ்ப்பாணம்)

தந்தை பாவித்த ஐஸ் போதை பொருளை எடுத்து விழுங்கிய இரண்டு வயது குழந்தை ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை அனுமதிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு கொக்கிளாய் பகுதியைச் சேர்ந்த நபரின் குழந்தை ஒன்றே இவ்வாறு ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளது. (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (13704)



**Online ICT Classes (Individual and Batch)**

>Grade 6 to 9 (School Syllabus)
(Theory, Practical on Computer and past Exam papers)
>Grade 10 & 11 (School Syllabus)
(Theory, Practical on Computer and past Exam papers)

V.V.Moorthy
Tel : 077 746 9282
E.Mail : studentwait@outlook.com
(13687)



**வீடு/கட்டடம் தேவை**

யாழ் நகரம் அண்டிய பகுதிகளில் சமையல் தொழில் செய்வதற்கு சகல வசதிகளுடனும், விசாலமான வீடு/ கட்டடம் நீண்டகால அடிப்படையில் உடனடியாகத் தேவைப்படுகிறது.

தொடர்புகளுக்கு
076 709 3368
(C-5428)



**உடனடி வேலை வாய்ப்புக்கள்**

EXECUTIVE OFFICER

✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/=
✓ வயது-22 தொடக்கம் 35
✓ தகுதி- பட்டதாரிகள் (C-5436)
(ஆங்கில அறிவு அவசியமானது)

V2 TRAVELS

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் | 0777-068-777



**IELTS** DMI COMPUTER EDUCATION 0777 17 35 17

#Student VISA மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
# Unique Test Tips
# 40 hrs with free 4 mock exam
# Latest course Material (Book 16)
Academic or General

IELTS Life Skills - A1
திருமணம் செய்து UK செல்வோருக்கானது

DMI , British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்

யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்
DIPLOMA IN ENGLISH
புதிய பிரிவு ஆரம்பம் 10/12/2022 Sat 9 am
SPOKEN ENGLISH நேரடி வகுப்புக்களாக

German - Germany ,Swiss நாட்டுக்கு செல்வோருக்கு Deuctsch
French - France நாட்டுக்கு செல்வோருக்கு (C-5434)

DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, கஸ்தூரியார் வீதி 0777 24 07 07 021 222 4403

| நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| 021 226 2470 | 021 227 0775 | 021 224 1970 | 021 225 6665 | 021 228 5655 |
| 0777577333 | 0777227074 | 0776032300 | 0761354503 | 0776398096 |


**பெயர் மாற்றம்**

இல.196 ஸ்கந்தபுரம் கிளிநொச்சி எனும் முகவரியைச் சேர்ந்த தேசிய அடையாள அட்டை இல.987841699V கொண்ட விஜயபாஸ்கரன் சஞ்சிகா ஆகிய நான் இன்றுமுதல் எனது பெயரை விஜயபாஸ்கரன் சன்சிகா என மாற்றிக்கொண்டுள்ளேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே கையொப்பம் இடுவேன் எனவும் இத்தால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

(13707) விஜயபாஸ்கரன் சன்சிகா

## மீன் பிடித்த இருவர் கைது

யாழ். கடலில், சட்டவிரோதமான தங்கூசி வலைகளை பயன்படுத்தி மீன்பிடித்தமை மற்றும் கடல் அட்டைகள் பிடித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டின் கீழ் நேற்று இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினரின் சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது குருநகர் மற்றும் வெற்றிலைக்கேணி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-7.104)

# மரண அறிவித்தல்

## கதிரித்தம்பி வேலும்மயிலும்

(ஓய்வுபெற்ற கிராம சேவகர்)



தோற்றம் 1932.01.26 | மறைவு 2022.12.06

அரசொல்லை அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கோவில் வாசல் இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கதிரித்தம்பி வேலும்மயிலும் நேற்று (06.12.2022) செவ்வாய்க்கிழமை அதிகாலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரித்தம்பி - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற கந்தையா - பூரணம் தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற மங்களேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற முருகையா, சின்னராசா மற்றும் சிவக்கொழுந்து, காலஞ்சென்ற தில்லையம்பலம், வீரசிங்கம், துரைராசா மற்றும் தம்பையா, சுந்தரலிங்கம் மற்றும் காலஞ்சென்ற பத்மராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, சுந்தரலிங்கம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் லோகேஸ்வரன்(தொழிலதிபர்), லதாவாணி (ஆசிரியர்- யா/இராமநாதன் கல்லூரி), சிவாஜினி(ஆசிரியர், யா/மயிலிட்டி கலைமகள் ம.வி), சிவலோஜினி(ஆசிரிய ஆலோசகர் - வலயக் கல்வி அலுவலகம், வலிகாமம். இணைப்பு வலயக்கல்வி அலுவலகம், கிளி.தெற்கு), வதனி (ஆசிரியர், யா/இராமநாதன் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜீவசியாமினி(முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், கல்வி அமைச்சு, வட மாகாணம்), இளங்கோ (அதிபர், யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி), ஸ்ரீஸ்கந்தராசா(லண்டன்), கமல்ராஜன்(வலயக் கல்விப் பணிப்பாளர், கிளி.தெற்கு), அமரர் Dr.ரகுபதி(பொது வைத்திய நிபுணர், தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் டிலோசன் (மாணவன், IIT), பிரியந்தன்(மாணவன், யா/ இந்துக் கல்லூரி), ஹாரிணி(மாணவி, யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) அபிநயன் (உற்பத்தி முகாமையாளர், Hemsons), ஆரதி(மாணவி, யாழ். மருத்துவ பீடம்), இளங்கீதன்(மாணவன், ஸ்ரீஜெயவர்த்தனபுர மருத்துவபீடம்), மிகுந்தன்(மாணவன் Junior smart center), அகர்சை (மாணவி, கிளி/ மத்திய ஆரம்ப வித்தியாலயம்), கோவர்த்தனன் (மாணவன், யா/ இந்துக் கல்லூரி), திருவகன் (மாணவன், யா/ இந்துக் கல்லூரி), யதுகுலன் (மாணவன், யா/ இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.12.2022) புதன்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோவில் வாசல்,
இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்

(13696)


**விற்பனைக்கு**

● இந்தியனின் நீர் இறைக்கும் இயந்திரம் விற்பனைக்கு உண்டு.
● KDh 200 PD-xxxx E 2007 விற்பனைக்குண்டு.
● Euro power 8 KVA ஜெனரேட்டர் ஊதியுடன் விற்பனைக்குண்டு.

077 773 0567
(13708)



**SB Travels and Tours pvt ltd**

**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணம் 198, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள Travels இற்கு Air ticketing and system knowledge அனுபவமுள்ள பெண்கள் வேலைக்கு தேவை. அல்லது Training வழங்கப்படும்.

075 808 3481
021 222 8555
sbtravels99@yahoo.com
(C-5435)



# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில் 140 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- A32 பிரதான வீதியில் இருந்து 600m தூரம்.
- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும் சாவகச்சேரி நகரத்திற்கும் அரச தனியார் பஸ் போக்குவரத்துச் சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்)
- நல்ல தண்ணீர் ஊற்றுச்சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)

ஒரு பரப்பின் விலை 675,000 ரூபாய் மட்டும்

தரகர் தேவையில்லை

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு - ஜெயம்
077 814 7389, 077 986 5457
(13705)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.